விலை ரூபா: 5.00

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | ஆனி 27 | வியாழக்கிழமை (11.07.2002) | தொலைபேசி 3378 | ஒலி 204




## ம.தி.மு.க தலைவர் வை.கோவை கைது செய்ய நீதிமன்றம் அனுமதி

### இன்று சென்னை விமான நிலையத்தில் கைது செய்யப்படுவார்

(சென்னை)

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர் வை. கோபாலசுவாமி அமெரிக்காவில் இருந்து இன்று தமிழகம் வரும் போது விமான நிலையத்தில் வைத்து போடோ சட்டத்தின் கீழ் கைது செய்வதற்கான உத்தரவை திருமங்கலம் நீதிமன்றம் நேற்று பிறப்பித்துள்ளது.

தமிழகத்தில் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்ட மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தின் 8உறுப்பினர்கள் போடோ சட்டத்தின்கீழ் கைது செய்து காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சென்னை விமான நிலையத்தில் இன்று கைது செய்யப்படவுள்ள வை.கோபாலசுவாமி 9வது உறுப்பினராக கைது செய்யப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வை.கோபாலசுவாமி கைது செய்யப்படுவதை அடுத்து பாதுகாப்பு நடவடிகையாக பெருந்தொகையான ம.தி.மு.க தொண்டர்கள் கைது செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க விடுதலைப்புலிகள் இயக்கம் இந்தியாவுக்கு எதிராக போரிடவில்லைஎனவும்

(10ம் பக்கம் பார்க்க)

### வேலணைத் தாக்குதல் சம்பவம்

## சுயாதீன ஆணைக்குழுவின் விசாரணை 16ல் ஆரம்பம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தீவகப் பொறுப்பாளர் செம்மணன், உறுப்பினர் தயாளன் ஆகியோர் வேலணையில் வைத்துத் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு நியமிக்கப்படடுள்ள சுயாதீன ஆணைக்குழுவின் விசாரணை அடுத்த வாரம் 16ம் திகதி முதல் ஆரம்பமாகி 19ம் திகதி வரை நடைபெறவுள்ளதாக சுயாதீன ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ் செயலகத்தில் சுயாதீன ஆணைக்குழுத் தலைவரும் முன்னாள் விமானப்படைத் தளபதியுமான ஹரி குணதிலகா தலைமையில் நடைபெறவுள்ள விசாரணையின்போது விசாரணைக் குழு உறுப்பினர்களான முன்னாள் நீதிபதி ஒலிவர் வீரசேனா, விடுதலைப்புலிகளின் பிரதிநிதியான சீ.வீ.கே. சிவஞானம் ஆகியோரும் பிரசன்னமாக விருப்பார்கள்.

இதேவேளை இந்த விசாரணைக்

(10ம் பக்கம் பார்க்க)

### பேச்சுவார்த்தை தாமதம்

# அரசின் சமாதான முயற்சி வெற்றியளிப்பதுசந்தேகமே!

## ஜனாதிபதியின் பேச்சாளர் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை விரைவில் ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விருப்பம் தெரிவித்துள்ளார். அவரின் விருப்பத்தை பொ.ஐ.முன்னணி வற்புறுத்தி வருவதாக ஜனாதிபதியின் ஊடகப்பேச்சாளர் ஹரீஸ் பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்ட 5மாதங்களாகியும் இரு தரப்பினருக்குமிடையே சமா...

...காவின் கருத்துக்களை தெரிவிக்கும் வகையில் செய்தியாளர் மாநாடு ஒன்றை ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீஸ் பீரிஸ் நேற்று

அரசு-புலிகள் பேச்சுவார்த்தை தாமதமடைந்து செல்வதனாலும் நாட்டின் சில இடங்களில் பதற்றம் ஏற்பட்டுள்ளதாலும் சமாதான முன்

(10ம் பக்கம் பார்க்க)

## வேலணை மத்திய கல்லூரியிலிருந்து படையினர் நேற்று வெளியேறினர்!

(யாழ்ப்பாணம்)

வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகா வித்தியாலயத்தின் (வேலணை மத்திய கல்லூரி) விடுதியில் முகாமிட்டிருந்த கடற்படையினர் நேற்று வெளியேறியுள்ளனர்.

1991ம் ஆண்டு இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் தீவுப்பகுதி வந்ததையடுத்து வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகா வித்தியாலயத்தில் கடற்படை முகாமிட்டிருந்தது.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டதை அடுத்து யாழ் குடாநாட்டில் உள்ள பாடசாலைகளில் இருந்து படையினர் வெளியேறி வருகின்றனர்.

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகா வித்தியா

(10ம் பக்கம் பார்க்க)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக் குமிடையே புரிந்துணர்வு உடன் படிக்கை ஏற்பட்ட 5மாதங்களாகியும் இரு தரப்பினருக்குமிடையே சமா தானப் பேச்சுவார்த்தைகள் ஆரம் பிப்பதில் ஏற்பட்டுவரும் கால தாம தம் குறித்து ஜனாதிபதி சந்திரிக் காவின் கருத்துக்களை தெரிவிக் கும் வகையில் செய்தியாளர் மாநாடு ஒன்றை ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீஸ் பீரிஸ் நேற்று நடத்தியிருந்தார். அந்த மாநாட்டிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தி ருந்தார். அங்கு அவர் தொடந்து பேசுகையில்:

நாட்டின் சில இடங்களில் பதற்றம் ஏற்பட்டுள்ளதாலும் சமாதான முன்

(10ம் பக்கம் பார்க்க)

## அமெ.தூதுவர் ஹக்கீமுடன் சந்திப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் அமெரிக்க தூதுவர் அஸ் லிவில்ஸை நேற்றைய தினம் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

அரசுககும் விடுதலைப்புலிகளுக் மிடையில் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்த

(10ம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவு அமைச்சர் யாழ். வரவுள்ளார்

கூட்டுறவுத்துறை அமைச்சர் ஏ. ஆர்.எம்.அப்துல்காதர் நாளை மறு தினம் உத்தியோக பூர்வ விஜயமாக யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளார்.

யாழ். வரும் அமைச்சரை கூட்டுற வாளர்கள வீரசிங்கம் மண்டபத்தில் சந்திப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. (இ)

ரின் கட்டுப்பாட்டுக்குள் தீவுப்பகுதி வந்ததையடுத்து வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகா வித்தியா

(10ம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக் குழுத்தலைவர் புலிகளின் தளபதிகளுடன் சந்திப்பு

## கொக்கட்டிச் சோலையில் இடம்பெற்றது

(மட்டக்களப்பு)

யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் பியூறு ஹெவ்டே தலை மையிலான குழுவினர் நேற்று மட்டக்களப்பில் விடுதலைப்புலிக ளின் கட்டுப்பாட்டுப் பகுதியான கொக்கட்டிச் சோலையில் புலிக ளின் முக்கிய தளபதிகளை சந் தித்துப் பேச்சுநடத்தியுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் மாவட் டச் செயலகத்தில் இடம்பெற்ற இப் பேச்சுவார்த்தையில் புலிகளின் சார் பில் சிறப்புத் தளபதி கேணல் கருணா, அரசியல்துறை சிறப்புத் தளபதி கரி காலன், மற்றும் அரசியல் பிரமுகர் களான வாசு, துரை, பானுதா ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுமார் இரண்டு மணி நேரம் தொடர்ந்த இரு தரப்பு பேச்சு வார்த் தையில் ஏ-5 செங்கலடி - பதுளை வீதித் திறப்பு, பிராந்திய தளபதி களுக்கும் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கும் இடையிலான நேர டித் தொடர்பு வசதிகள் மற்றும் கிழ க்கு மாகாணத்தில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங் கள் குறித்து ஆராயப்பட்டதுடன் போர் நிறுத்த புரிந்துணர்வு உடன் படிக்கையை மேலும் வலுப்படுத்து வது குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

(10ம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகள் மீது முஸ்லிம்கள் முழுமையான நம்பிக்கை வைக்கலாம்

## கேணல் கருணா அம்மான் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் அண் மையில் இடம்பெற்ற இன வன்முறைச சம்பவங்களில் சில தீய சக்திகளின் பின்னணி பற்றி தான் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினரிடம் தெளிவாக எடுத்துக் கூறியதாக விடுதலைப் புலிகளின் சிறப்புத் தள பதி கேணல் கருணா அம்மான் தெரி வித்துள்ளார்.

நேற்று மட்டக்களப்பில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரு டன் பேச்சுவார்த்தை நடத்திய பின் னர் பேச்சுக்கள் குறித்து பத்திரி கையாளர்களுக்கு கருத்துத் தெரி விக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

இன வன்முறைச்சம்பவங்களில் தீய சக்திகளின் பின்னணி இருந்துள் ளதை கண்காணிப்புக்குழு ஏற்றுக் கொண்டதாக கூறிய கேணல் கருணா அம்மான்,

(10ம் பக்கம் பார்க்க)

## வரிச் சட்டமூலம் நிறைவேறியது

பாராளுமன்றில் நேற்று சமர்ப் பிக்கப்பட்ட வரிச் சட்டமூலம் 33 மேல திக வாக்குகளால் நிறைவேறியது.

சட்டமூலத்திற்கு ஆதரவாக 102 வாக் குகளும் எதிராக 69 வாக்குகளும் அளிக் கப்பட்டன. ஈ.பி.டி.பி, புளொட் அமைப் பினர் சட்டமூலத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர். தமிழர் விடுத லைக்கூட்டணியினர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. (து)

## பண்டிதர் கந்தையா காலமானார்

(ஏழாலை)

முதுபெரும் சைவசித்தாந்தப் பேரறிஞர் இலக்கியகலாநிதி ஏழா லையூர் பண்டிதர் மு.கந்தையா நேற்று மாலை காலமானார் அவருக்கு வயது 85.

முதுபெரும் இலக்கிய கர்த்தா வான இவர் சைவசித்தாந்ததுறை யில் பல ஆய்வுகளை மேற்கொண்டு தமிழகத்து அறிஞர்களால் பாராட் டப்பெற்றவர்.

(10ம் பக்கம் பார்க்க)

# இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங் இன்று இலங்கை வருகை

(கொழும்பு)

இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங் இருநாள் விஜயமாக இன்று இலங்கை வரவுள்ளார்.

ஜூன் மாதம் இந்தியப் பயணம் மேற்கொண்ட இலங்கைப் பிரதமர் ரணிலுடன் இடம்பெற்ற பேச்சுக்களின் அடிப்படையில் இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தக பொருளாதார உறவுகளை மேம்படுத்தல் இலங்கை- இந்திய சுதந்திர வர்த்தக வலயம் தொடர்பான உடன்படிக்கையை ஏற்படுத்தல் ஆகியனவே இப் பயணத்தின் நோக்கமாகும் (உ)

## வருடாந்த உற்சவம்

(மந்திகை)

அல்வாய் வேலிலந்தை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 23 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (ஷ-23)

# ஆயுத முனையில் துணிகரக் கொள்ளை

## சங்கரத்தையில் சம்பவம்

(வட்டுக்கோட்டை)

சங்கரத்தை துணைவிச் சந்திக்கு அருகில் நேற்றுமுன் தினமிரவு ஆயுதமுனையில் துணிகர கொளளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 9. 30மணியளவில் சங்கரத்தை துணைவிச்சந்தியிலுள்ள கட்டிட ஒப்பந்தகாரர் ஒருவரது வீட்டிற்குள் நுழைந்த ஆயுதக் குழுவினர் அவரது மகனை ஆயுதமுனையில் அச்சுறுத்தியதுடன் வீட்டிலிருந்து பல லட்சம் ரூபா பெறுமதியான நகை, பணம் என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் இரவு ஒருமணியளவில் அங்கிருந்து வெளியேறியதாகவும் அதற்குமுன்னதாகவானத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததாகவும் கூறப்படுகிறது.

இந்தக் கொள்ளைச் சம்பவத்தில் பத்திற்கு மேற்பட்டவர்கள் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டதுடன் சம்பவஇடத்திற்குப் பொலிஸார் சென்று பார்வையிட்டுள்ளனர்.

(த-216)

## முன்பள்ளி விளையாட்டு விழா

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் மானிப்பாய் பட்டின சபையின் உப அலுவலக முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்தவிளையாட்டுப்போட்டி இன்று 1.30 மணியளவில் பிரதேச சபை தலைமைச் செயலக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேசசபையின் செயலாளர் பி.விக்டர் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதேச சபைத் தலைவர் வெ.அன்ரன் ஜோன்சன் பிரதம விருந்தினராகவும் பிராந்திய உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்

(இ-232)

# வீரமக்கள் தினம் சனி முதல் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

புளொட் அமைப்பினால் நாளை மறுதினம் சனிக்கிழமை முதல் நான்கு தினங்களுக்கு வீரமக்கள் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் பல்வேறு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இந்தவகையில் 13 ஆம் திகதி யாழ் போதனா வைத்திய சாலையில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு இடம்பெறுவதுடன் 14,15 ஆம் திகதிகளில் பொது இடங்களில் சிரமதானம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இறுதி நாளான 16 ஆம் திகதி இது வரை காலமும் ஈழப்போரில் மரணித்த தலைவர்கள், போராளிகள் பொது மக்கள் ஆகியோரை நினைவு கூரும் அஞ்சலி நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டதாக புளொட் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஷ-19)

## பூப்பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை மாவட்டத்தில் எதிர்வரும் 18,19ந் திகதிகளில் இடம்பெறவுள்ள வடக்குகிழக்கு மாகாணப் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக யாழ்மாவட்ட பூப்பந்தாட்ட வீரர்,வீராங்கனைகள் 42பேர் செல்லவுள்ளனர். (உ.6)

## பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

குழந்தைகளின் மனநலம் சம்மந்தமாக ஆசிரியர்களுக்கு முழுநேர பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 20,21ந்திகதிகளில் சாந்தியகவிரிவுரைமண்டபத்தில் இடம்பெறவுள்ளது

வவுனியா ஜீ.ரி.சற்நிறுவனத்தின் அதிகாரிகள் இப் பயிற்சிப்பட்டறையை நடத்தவுள்ளனர். (உ-6)

## புதிய கட்டட திறப்பு விழா

(கோப்பாய்)

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மூன்றுமாடிக் கட்டடத் திறப்பு விழா இன்று மு.ப 10 30 மணிக்கு வித்தியாலயஅதிபர் சு. யோகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் வழங்கவுள்ளார்.

முதன்மை விருந்தினராக இந்து சமய விவகாரங்கள் அமைச்சர் தி. மகேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

(ஷ-79)

## பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் தென்னிலங்கையிலிருந்து சமாதானப் பயணம் மேற்கொண்டு யாழ். வந்து திரும்பிய சமாதான யாத்திரைக் குழுவினர் இங்குள்ள பாடசாலை மாணவர்களுக்கு அன்பளிப்புப் பொருட்களை வழங்கியுள்ளனர்.

மேற்படி பொருட்கள் பாதிக்க பட்ட பாடசாலைகளுக்கு வழங்குவதற்கென வலயக்கல்விப் பணிமனையில் வைத்து மேற்படி குழுவினரால் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஷ-19)

## முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணிக்கு யாழ்.செயலக விளையாட்டுப் பணிமனையில் யாழ்.செயலக விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் திருமதி ஜெ எவ்.ஜெ.ரூபசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வது தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-6)


## யாழ்ப்பாணம் - மாநகரசபை

## யாழ்ப்பாணம் மாநகரசபைக்குச் சொந்தமான கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான

# கேள்வி அறிவித்தல்

இதன்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளதும் நல்லூர் குருநகர்,யாழ்ப்பாணம் பெரியகடைப்பகுதியில் அமைந்துள்ளதுமான கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள், யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளராகிய என்னால் 31.7.2002ந்திகதி புதன்கிழமை பி.ப12.30மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கக்கூடிய கேள்விப்பிணைப்பணமும், மீளளிக்க முடியாத கேள்விப்படிவக்கட்டணமும் செலுத்துவதன் பேரில் 30.7.2002ந்திகதிசெவ்வாய்க்கிழமை பி.ப3.00மணிவரையும் யாழ்ப்பாணம் மாநகரசபையால் வழங்கப்படும் உத்திபோகபூர்வமான படிவங்களின் இணைப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்படிவங்களை யாழ்ப்பாணம் மாநகரசபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு 31.7 2002ந்திகதி புதன்கிழமை பி.ப12.30மணிக்குப்பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால்மூலம் அனுப்பப்பட வேண்டும். கடிதஉறையின் இடதுபக்க மேல்மூலையில் கடைஇல. கேள்விக்கானவிண்ணப்பம் எனஎழுதப்படல் வேண்டும். தபாலில் அனுப்பப்படும் போது ஏற்படும் தாமதங்களுக்கு யாழ்ப்பாணம் மாநகரசபைபொறுப்பேற்க மாட்டாது.

கேள்விகள் 31.7·2002ந்திகதி பி.ப2 30மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரால் அங்கீகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி எவரேனும் சமூகமளிக்க முடியும். மேலதிக விபரங்களை அலுவலகநேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

எந்தவொரு கேள்வியையும் காரணம்காட்டாது ஏற்கவோஅல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரணஅதிகாரமுண்டு.

### விபரம் வருமாறு:

| கடை இல. | அமைந்திருக்கும் இடம் | கேள்விப் பத்திர கட்டணம் | கேள்வி வைப்பு கட்டணம் | மாத வாடகை | ஏற்றுக்கொள்ளப்படும் ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ஜி. எஸ். ரி நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| 107 | யாழ் பெரிய கடை | 500. 00 | 10000. 00 | 1200. 00 | 288000. 00 |
| 108 | யாழ் பெரிய கடை | 500. 00 | 10000. 00 | 1200. 00 | 288000. 00 |
| 109 | யாழ் பெரிய கடை | 500. 00 | 10000. 00 | 1200. 00 | 288000. 00 |
| 110 | யாழ் பெரிய கடை | 500. 00 | 10000. 00 | 1200. 00 | 288000. 00 |
| 08 | குருநகர் | 500. 00 | 10000. 00 | 600. 00 | 144000. 00 |
| 09 | குருநகர் | 500. 00 | 5000. 00 | 300. 00 | 72000. 00 |
| 10 | குருநகர் | 500. 00 | 5000. 00 | 300. 00 | 72000. 00 |
| 11 | குருநகர் | 500. 00 | 5000. 00 | 300. 00 | 72000. 00 |
| 24 | குருநகர் | 500. 00 | 5000. 00 | 300. 00 | 72000. 00 |
| 13, 14 | நல்லூர் | 500. 00 | 1CCCC. CC | 600. 00 | 144000. 00 |

குறிப்பு:-

1. சித்திபெறும் கேள்விக்காரர்கள் 07 நாட்களுக்குள் கேள்வித் தொகையையும் அதற்குரிய ஜி.எஸ்.ரியையும் பூரணமாக செலுத்தி சபையுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்தல் வேண்டும்.
2. ஒரு விண்ணப்பப் படிவத்தில் ஒரு கடைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.
3. கேள்வித் தொகையுடன் 12. 5% ஜிஎஸ்ரி வரியையும் சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
4. நடத்தப்படவுள்ள வியாபாரத்தின் தன்மை குறிப்பிடுதல் வேண்டும்.
5. தங்களால் நடாத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்டபின்பே அனுமதி வழங்கப்படும்.
6. சித்திபெற்ற கேள்விக்காரர் உடன்படிக்கை செய்யும்போது 03 மாத வாடகை முற்பணமாக செலுத்தப்பட வேண்டும்.

இ. இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
10. 7. 2002.

(C- 9650)

### பட்டதாரி பயிலுநர் ஆட்சேர்ப்பு

# நேர்முகத் தேர்வுக்கு தோற்றத் தவறியவர்களுக்கு சந்தர்ப்பம்

(யாழ்ப்பாணம்)

முன்பு இடம்பெற்ற பட்டதாரிப் பயிலுநர் ஆட்சேர்ப்புக்கான நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டும் தோற்றத்தவறியவர்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வகையில், 102 பட்டதாரிகளுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

நேர்முகத் தேர்வுக்காக அழைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர், விபரம் வருமாறு;

இ. சாந்தன் சுண்டுக்குளி, அ. தமிழ்ச்செல்வி வட்டக்கச்சி, செ. சிவராசா கொழும்பு, ச. ஜனார்த்தனன் இணுவில், ஜி. ஜோய் றோஸ்யாழ்ப்பாணம், க. அகிலாதேவி கச்சாய்,

செ. செல்வசுகுணா பருத்தித்துறை, ம. தட்சாயினி வண்ணார்பண்ணை, ந. இராஜரட்ணம்கொழும்பு, கு. சற்குணதேவி துணுக்காய், ஆ. சுகவாணி இணுவில், க. குலதிலகம் மட்டுவில், ப. அகிலன் நல்லூர்,

சி.அந்தோனியா-யாழ்ப்பாணம்,வை.ஜெயராசன்- சுன்னாகம், ப.சுதர்மிலா- கோண்டாவில், வி.பரமேஸ்வரன்-புலோலி.

ச.கௌசலா- திருகோணமலை,க. சசிகலா- வரணி, க. வாசுகி -தெகிவளை, தி.மாலதி-வட்டுக்கோட்டை, அ. அனுகீத்தா யாழ்ப்பாணம்.

கஸ்பர்யூடிகொய்யாத்தோட்டம், இ. ஜெயமுகானந்தன் மானிப்பாய், சி. வசந்தி வவுனியா, சி. சிவாஸ்கரன் யாழ்ப்பாணம் த திகளொளிபவன் பண்டத்தரிப்பு, க.பகீரதி கரவெட்டி, கு. சுபானந்தினியாழ்ப்பாணம்,கு.பாமா யாழ்ப்பாணம், மு.சுதர்சினி இராஜகிரிய.

த.புவனேந்திரன் அல்வாய் வே.கரிவண்ணன் வவுனியா, கு.சிவாஜினி திருகோணமலை,ம.குமுதினி புலோலி மேற்கு,இ.சுதர்ஜினி சாவகச்சேரி,இ.ரேணுகாதெகிவளை, க.ரமேஸ் கோண்டாவில் மேற்கு, வே.கலைச்செல்வன் மிருசுவில்,க.சோதிமலர் திருகோணமலை,பா.நித்தியா கரவெட்டி,செ.சோமசுந்தரம் சாவகக்சேரி, பா.கலிஸ்ராகிறேஸ் கொட்டாஞ்சேனை, ம.பிரபாகரன் கொக்குவில் மேற்கு,கு.குணவதி திருநெல்வேலி,சி.வாசுகி திருநெல்வேலி,கு.பற்குணராஜா நல்லூர்.

ம. சாந்தி புலோலி தெற்கு, சு. பத்மராணி வல்வெட்டித்துறை, து. சிவசுபைதா திருநெல்வேலி மேற்கு,ந.மாலினி ஒட்டுமடம், சா. காந்தினி கொழும்பு 6, அ. றொகானி மன்னார், க. அஙங்கன் தெகிவளை, த. கிருபாகரன் அல்வாய் வடக்கு,யோ. வசந்தினி புலோலிமேற்கு,ம. குணாநிதி சுன்னாகம் கிழக்கு, ந. துஷ்யந்தி வெள்ளவத்தை, வி, அகிலா யாழ்ப்பாணம், இ. குகதர்சினி கொழும்பு 6, கு. சந்திரகுமாரி தெகிவளை, ந. அஜந்தா நெல்லியடி, ம. சுகந்தி வெள்ளவத்தை, த. குருபரன் தும்பளை.

ச. சிவறஞ்சன் நுணாவில் மத்தி, பி. றிச்சாட் வட்டுக்கோட்டை, இ. லிஸ்ரின் சியாமளா வவுனியா, க. பத்மரஞ்சினி இணுவில், ஞா. சிவகௌரி பண்டத்தரிப்பு,கு. சிவகௌரி வட்டு-கிழக்கு, கு. ஆதயறனுகா சுழிபுரம்.

ப. சிவறூபி சங்கானை, சி.உமாச்சந்திரன் கொக்குவில் கிழக்கு, சு. பிரியசாந்தி யாழ்ப்பாணம், கு. லவேந்திரகுமார், கொழும்பு-6, ச. முகமட் இற்பான் புத்தளம், யோ. சசிதரன் அரியாலைமத்தி, ப. விஜேந்திரன் மட்டக்களப்பு,ச. நித்தியானந்தராஜா,கொழும்பு-6.

சி. ஜெயந்தன் அல்வாய் கிழக்கு, இ. பிறேமகுமாரி, வாதரவத்தை ,தி. மகேஸ்வரன் கரவெட்டி மத்தி, ச. துரன்தாதி நுகேகொட, ந. யாழினி வல்வெட்டி. நா.கண்ணதாசன் பொகவத்தலாவ, க. நகுலன் இடைக்காடு,ஈ. அகல்யா கரவெட்டி கிழக்கு, க. முரளிதரன் நல்லூர் வடக்கு.

க. ஆனந்தகிருஷ்ணன் சங்கானை, வ. சேதீஸ்வரசர்மா கல்வியங்காடு, ரா. கோகுலதாஸ் மகாறம்பைக்குளம், த. வாசுந்தரா இணுவில், செ. சிவதாட்சனி மானிப்பாய், கி. மணிசேகரம் வாரியப்புலம், தி. சிவாஜினி நீர்வேலிவடக்கு, பா. சுகந்தி உயரப்புலம், ரி. ஜீவானந்தன்துணுக்காய்,எஸ் றாஜினி திருகோணமலை, கே. சோதிமலர் கோணேசபுரம், ரி. செல்வநந்தினி திருகோணமலை, கே சிவாஜினி திருகோணமலை, எஸ். கஜேந்திரன் திருகோணமலை.

(இத)

### பதுக்கிவைத்திருந்த

# ஒருகோடி பெறுமதியான கடல் அட்டைகள் மீட்பு

(கொழும்பு)

புத்தளம். தாராவில்லு பகுதியில் தோட்டம் ஒன்றில் சட்டவிரோதமாக களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த ஒருகோடி ரூபாய் பெறுமதியுள்ள கடல் அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

புத்தளம் மாவட்ட கடற்றொழில் விரிவாக்கல் அதிகாரி டீ. எச் கீர்த்தி சோம மற்றும் முந்தல் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனை வேட்டையின் போது இவைகண்டுபிடிக்கப்பட்டு, கடற்றொழில்திணைக்களத்தால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

கண்டுபிடிக்கப்பட்ட கடல் அட்டைகள் 70 மில்லி மீற்றர் நீளத்திற்கு குறைவாக இருப்பதால்இவற்றை பிடிப்பதற்கு கடற்றொழில் அமைச்சு அனுமதி வழங்கவில்லைஎன்றும், இவை நீர்கொழும்பு பகுதி மீனவர்களால் திருகோணமலை பகுதிக்குச் சென்று பிடிக்கப்பட்டுள்ளன எனவும் விரிவாக்கல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(உ-3)

## சர்வோதயக் குழு யாழ். வரும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சர்வோதய நிறைவேற்றுப் பணிப்பாளர் டாக்டர் வின்ஞாச ஆரியரட்ண தலைமையிலான சர்வோதயக் குழுவினர் எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

(உ-6)

## இராசி பலன்

11 - 07 - 2002

(ஆனி 27, வியாழன்)

பிரதமை பி.ப 3.04 வரை
புனர்பூசம் மு. ப. 9.04 வரை
ராகுகாலம் 1.29-2.59
நல்ல நேரம் 7.29-8.59

**மேடம்**

உடல் நலக்குறைவு தொழில் நன்மை, திடீர் நன்மை, காரிய தாமதம்.

**இடபம்**

சகோதரர்உதவி, பிரயாண நன்மை, குடும்ப மகிழ்ச்சி, காரிய நன்மை.

**மிதுனம்**

தேவையற்ற விவாதம், உஷ்ண வியாதி, முயற்சி தாமதம், பொருள் விரயம்.

**கடகம்**

எடுத்த காரியம் கைகூடும், உறவினர் வருகை, சயன சுகம், போசன சுகம்.

**சிங்கம்**

உணர்ச்சிவசப்படல், தொழில் நன்மை, காரிய அலைச்சல், சுப செலவு.

**கன்னி**

தனலாபம், குடும்ப சுகம், கௌரவம், காரியஅனுகூலம்.

**துலாம்**

நல்ல காரியம், தொழில் விருத்தி, பிறர் உதவி, நிலை மாற்றம்.

**விருச்சிகம்**

பெரியோர் மனஸ்தாபம், உடல் வியாதி, காரிய தாமதம், பிரயாணம்.

**தனுசு**

காரியதடங்கல், நண்பர்கள் விரோதம், போசன சுகம், உடல் நலக்குறைவு.

**மகரம்**

அபூர்வ சந்திப்பு, முயற்சி பலிதம், நல்ல வரவேற்பு, பிரயாண நன்மை.

**கும்பம்**

சத்துரு ஜெயம், புதிய தொழில் சிந்தை, காரிய சித்தி, சந்தோஷமான சம்பவம்.

**மீனம்**

வியாபார நன்மை, முயற்சி தாமதம்,புத்திரரால் கவலை. உடல் சோர்வு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

### இந்தியாவின் ஏற்றுமதி

# ஊக்குவிப்பு வலயம் திருமலையில்

# கிழக்கு பாதுகாப்பு இறுக்கமடையும்

(கொழும்பு)

இந்திய முதலீட்டாளர்களுக்கு திருமலையில் ஒருஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம் ஏற்படுத்திக்கொடுப்பதற்குஇலங்கை அரசாங்கம் உடன்பாடு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக கடந்த வாரம் உயர்மட்ட இந்திய தூதுக்குழுவினருடன் சந்திப்பொன்று நடைபெற்றது.

இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் பற்றியும், அதில் ஏற்படக்கூடிய சிக்கல்கள் பற்றியும் அங்குவிரிவாக பேசப்பட்டதாக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்திய ஏற்றுமதியாளர்களுக்கென ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம் ஒன்று அமைக்கப்பட வேண்டிய அவசியம் பற்றி இலங்கை அதிகாரிகள் பிரேரணை முன்வைத்ததையடுத்து. இதற்கு இந்திய தூதுக் குழுவினர்தமது உடன்பாட்டை தெரிவித்துள்ளனர்.

எண்ணெய்த் தாங்கிகளுக்கான ஒப்பந்தம்செய்யப்பட்டு 2 மாதங்களின் பின்னர் ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம் உருவாக்கப்படும்போது கிழக்கில்பாதுகாப்புமேலும்இறுக்கமடையும் என்பதுடன் இந்தியர்களின் அபரிமிதமான நடமாட்டமும் ஏற்படும் என்றும்,ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம் அடுத்த 6 மாதங்களினுள் உருவாக்கப்பட்டு விடும் என்றும் அரசவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(இ)

### நெல்லியடிப் பகுதியிலும்

# வீதியோர வியாபாரத்தால் போக்குவரத்து நெரிசல்

(துன்னாலை)

நெல்லியடி நகரப்பகுதியில் பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் களைகட்டி வரும்நடைபாதைவியாபாரத்தினால் வீதிப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதாக பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணம் - கண்டி பிரதான வீதி திறக்கப் பட்டதை அடுத்து இங்கு பெருகி வரும் தென்னிலங்கை வியாபாரிகளின் வியாபார நடவடிக்கையினாலேயே இச்சிரமம் ஏற்பட்டுள்ளது.

நெல்லியடி பழையமரக்கறிச்சந்தைக்கு முன்பாக வாகனங்களை நிறுத்தியும் வீதியின் இரு மருங்கிலும் பொருட்களை வைத்தும் வியாபாரத்தில் ஈடுபடுவதே இந்நெருக்கடிக்குக் காரணமாகும்.

(ஷ-4)

## ஹெரோயின் வைத்திருந்தவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக 2 ஆயிரத்து 715 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த நபர் ஒருவரை அஹுங்கல்ல பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மேற்படி நபர் தினமும் கொழும்பிலிருந்து பலபிட்டியவுக்கு ஹெரோயின் கொண்டு சென்று விற்பனை செய்வதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்தே பொலிஸார் இவரைக் கைதுசெய்துள்ளனர்.

(உ-3)

### வடக்கு- கிழக்கில்

# கிரிக்கெட் துறையை முன்னேற்ற முயற்சி

(திருகோணமலை)

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் கிரிக்கெட் ஆட்டத்தினை முன்னேற்றும் நோக்கில் பயிற்சித் திட்டங்களை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மேற்கொண்டு வருகின்றது.

இதன் பிரகாரம் வவுனியா, மன்னார், பொலனறுவை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட கிரிக்கெட் சபைகளின் உதவியுடன் கிரிக்கெட் ஆட்டத்தினை விருத்தி செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை கிரிக்கெட் சபை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

நேற்று முதல் ஆரம்பமான இப் பயிற்சியில் அவ்வவ் மாவட்டங்களின் திறமையான வீரர்கள் பயிற்சிகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

(உ)

### வெலிக்கடை

# சிறைச்சாலையை வேறிடம் மாற்ற முடிவு

(கொழும்பு)

கொழும்பு பொரளையில் அமைந்துள்ள வெலிக்கடைச் சிறைச்சாலையை இடம் மாற்றம் செய்ய உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தீர்மானித்துள்ளார்.

46 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளமேற்படி சிறைச்சாலையில் நிலவும்இட நெருக்கடியைக் குறைப்பதற்காக கொழும்பு புறநகர்ப் பகுதிக்கு இச் சிறைச்சாலையை இடமாற்றம் செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது சிறைச்சாலை அமைந்துள்ள இடத்தை வேறு தேவைகளுக்கு பயன்படுத்த முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (உ-3)

## முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வர்த்தகர் சங்க நிர்வாகிகள்,சிற்றூர்திச் சங்க நிர்வாகிகள்,ஆட்டோ சங்க நிர்வாகிகள் மற்றும் ஒலிப்பதிவு நாடா விநியோகஸ்தர்கள் ஆகியோருடனான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று பி.ப.3. 00 மணிக்கு பொற்பதி வீதியிலுள்ள அரசியல்துறை செயலகத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

(உ-3)

**பேராசிரியர்**

யிலும் எழுந்ததுண்டு. அப் பெருவிருப்பின் பயனாகத் தோன்றியது இம் மாணிக்க மாலை. இந்நூலில் உள்ளவாறே உரைப்பகுதியை உரை நடையிலும் செய்யுட் பகுதியை செய்யுள் நடையிலும் யாத்துள்ளேன். இது முதநூலைத் தழுவிஎழுந்த ஒரு தமிழ்நூல் என்க மொழிபெயர்ப்பு அன்று.

(முற்றும்)

# காரைநகர் பத்தர்கேணி வன்மீக விநாயகர் ஆலய

# மகா கும்பாபிஷேக சிறப்புமலர் 11-07-2002

## ஆலய பிரதம குருவின் ஆசியுரை



பததர்கேணி அருள்மிகு வன்மீக விநாயகர் ஆலயத்தில் எனது ஈடுபாடு சுமார் அறுபத்திரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்டது. ஏனெனில் இந்த ஆலயத்தில் ஏழு வயதில் சமஸ்கிருதம் கற்பதற்காக அந்த நாளில் பரிகைஷ அதிகாரியாக இருந்த எனது பாட்டனார் சிவஸ்ரீ சதாசிவஐயர் (சுனனாகம் பிராசினா சமஸ்கிருத பாடசாலையின் அதிபர்) அவர்கள் பிரம்ம சமாஜம் என்னும் பெயரில் சமஸ்கிருத வகுப்பு ஏற்பாடு செய்து மருதடி வாசர் சிவஸ்ரீ ச.பஞ்சாக்ஷர குருக்கள் அவர்களை ஆசிரியராக சமஸ்கிருத பாடங்களை கற்று வந்தேன். அப்போது என்னுடன் சுமார் இருபத்தைந்து மாணவர்கள் சமஸ்கிருதம் கற்று வந்தார்கள். அந்த ஈடுபாடு தான் தற்போது வன் மீக விநாயகருக்கு தொண்டு செய்யும் படி எனது மைத்துனர் பிரம்மஸ்ரீ வி.ஜெகதீசசர்மா அவர்கள் வேண்டிக் கொண்டார். பல ஆண்டுகளுக்குப்பின் அந்தர்த கும்பாபிஷேகம் செய்து நித்திய பூஜை ஒரு காலம் செய்து வந்தேன். வன்மீக விநாயக ஆதினகர்த்தா பிரம்மஸ்ரீ வி.ஜெகதீச சர்மாவின் வேண்டுகோளுக்கு இணங்கவும் பல அன்பர்களின் விடா முயற்சியின் காரணமாகவும் ஐம்பது ஆண்டுகளுக்கு பின் நடைபெறும் புனராவர்த்தன கும்பாபிஷேகத்தில் பங்குபற்றும் வாய்ப்புபெற்றதை இட்டு மிகவும் பெருமை கொள்கின்றேன். எனவே வன்மீக அடியார்கள் எல்லோரும் எல்லா வளமும் பெற்று பெரு வாழ்வு வாழ ஆசீர்வதிக்கின்றேன்.

ஓம் சாந்தி!சாந்தி!!சாந்தி!!!

**நா.ஞானசம்பந்தசர்மா**
*ஆலய பிரதம குரு.*

## ஆலய தர்ம கர்த்தாவின் ஆசியுரை



எனது மூதாதையினரான இராமையர் என்பவரால் இற்றைக்கு200 அண்டுகளிற்கு முன்னர் பத்தர்கேணியடியில் பிரதிஷ்டை செய்யப்பட்டு பூஜைகள் நிகழ்த்து வழிபட்ட வன்மீக விநாயகருக்கு இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

நீண்டகாலத்துக்குப்பின்னர் விநாயகனின் அருட் கடாட்சத்தால் சென்ற ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்ட இவ்வாலயம் இன்றைய தினம் அடியார்களின் அயராத முயற்சியினால் இன்று கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. இன்றைய கும்பாபிஷேகத்தை கண்டுகளிக்கும் பக்தர்களுக்கும் ஆலயத்தை புனரமைப்புச் செய்ய எல்லா வகையிலும் உதவிய அடியார்களிற்கும் சகல சௌபாக்கியங்களும் நீண்ட நோயற்ற ஆயுளும் பெற்று வாழ வேண்டும் என்று வன் மீக விக்னேஸ்வரப் பெருமானை வணங்கி ஆசி கூறி அமைகிறேன்.

**இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.**

**சிவஸ்ரீ.வி.ஜெகதீஸ்வரசர்மா.**
*ஆலய தர்மகர்த்தா.*

ஆலயத்தின் எழில் மிகு முகப்புக் தோற்றம்



## ஆலய வரலாற்றின் சுருக்கம்

காரைநகர் பத்தர்கேணி வன்மீக விநாயகர் விக்கிரகம் இற்றைக்கு 200 ஆண்டுகளிற்கு முன்பு இராமையர் என்ற அந்தணப் பெரியார் வட இந்தியாவின் புண்ணிய இடமாகிய காசியில் இருந்து கொண்டு வந்து பத்தர் கேணிக்கு அருகில் உள்ள காணியில் பிரதிஷ்டை செய்து வைத்தார். இவ் ஆலயம் பத்தர் கேணிக்கு அருகில் அமைந்தமையால் பத்தர்கேணிப் பிள்ளையார் என்றும் பெயர் வழங்கி வழிபடுகின்றனர்.

ஆரம்பத்தில் சிறு குடிசை அமைத்தே ஊர்மக்களால் வழிபட்டு வரப்பட்டது. அக்காலத்தில் இவ் விக்கிரகத்தை எடுத்து வந்த இராமையர் என்ற அந்தணப் பெரியாரே பூசைகள் நிகழ்த்திவந்தார். அவரது சிவபதத்திற்கு பின்னர் அவரது மகனான முருகேசு ஐயரும், இவரைத் தொடர்ந்து இவரது மகனான விஸ்வநாதையரும் ஆலயத்திற்கு உரிய அந்தணக் கிரியைகளை நடாத்தி வந்தனர். இக்காலத்தில் குடிசையில் அமைந்த ஆலயம் சுண்ணாம்பிலான கட்டிட பொலிவு பெற்றது. ஆனால் இக்கட்டிட அமைப்பானது ஆலயத்தன்மை குறைந்த மடம் போல் அமைந்த ஓர் அமைப்பினை உடையதாக அமைந்தது. ஆனாலும் வன்மீக விநாயகரின் அருளினால் அக் கிராம மக்கள் ஆத்ம திருப்தியை அடைந்தனர். ஆதலினால் இவ் விநாயகரை வழிபடும் மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. வழிபடும் இக் கிராம மக்கள் சகல கௌபாக்கியங்களும பெற்றவர்களாக திகழ்ந்தனர்.

இந் நிலையில் 1958ம் ஆண்டு விசுவநாதையரும் சிவபதம் அடைய இவரது மகன் ஜெகதீஸ்வரசர்மா தனது ஆலய கிரியைப் பணிகளை நிகழ்த்தி வந்தார், ஆலய தரிசனத்தால் ஆத்ம திருப்தி அடைந்த பக்தர்கள் ஆலயத்தை புனரமைக்க தீர்மானித்து சுண்ணாம்புக் கட்டடங்கள் அகற்றப்பட்டு சீமெந்திலான மண்டபங்கள் நிறுவப்பட்டு 1962ம் ஆண்டு புனருத்தான கும்பாபிஷேகம் நடைபெற்றது. இவ்வாறு சகல கிரியைகளும் சிறப்பாக நடை பெற்றவேளை 1991ம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக எமது ஊர் மக்கள் இடம்பெயர வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதனால் அலய கிரியைகள் நடைபெறவில்லை. ஆனாலும் ஓர், இரு அடியார்கள் விநாயகருக்கு விளக்கேற்றி வழிபட்டனர். பின்னர் 1996ம் ஆண்டு மீளக்குடியேறிய மக்கள் எம்பெருமானிற்கு பிராயச்சித்த அபிஷேகம் செய்து பூசைகள் செய்து வழிபடத் தொடங்கினர்.

2001ம் ஆண்டளவில் ஆலய திருப்பணிச்சபை ஒன்று உருவாக்கப்பட்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. இவ் ஆலய அயல் பக்தர்களின் அயராத உழைப்பினாலும் தொண்டினாலும் புனரமைப்பு வேலைகள் சிறப்பாக நிறைவு பெற்று இன்று மஹா கும்பாபிஷேகம் நடை பெறுகின்றது. இக் கும்பாபிஷேக கிரியைகளையும், பூசை நிகழ்வுகளையும் அகக் கண்ணாலும், புறக்கண்ணாலும் வழிபட்டு எம்பெருமானின் சித்திகளைப் பெற்று வாழவேண்டும் என்று பிரார்த்திப்பதோடு தொடரும் சமாதானம் நிரந்தரமானதாக அமைய வேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்து விநாயகனின் பாதார 'விந்தங்களை தொழுவோமாக.

"வேழமுகத்து விநாயகனைத்தொழ
வாழ்வு மிகுத்து வரும"

## இந்து கலாசார அமைச்சரின் ஆசியுரை



இலங்கையின் வடபால் அமைந்த எழில்மிகு யாழ்ப்பாண தீபகற்பத்தைச் சூழந்த சப்த தீவுகளில் ஒன்றும் பல புண்ணிய சைவத் திருத்தலங்களை தன்னகத்தே கொண்டு விளங்கு வதும் உண்மைச் சமய வாழ்வினைக் கைக் கொண்டு இறைவழிபாடாற்றி வருகின்ற சைவப் பணப்பாடு மிக்க மக்கள் வாழும் பிரதேசமாக விளங்கும் காரைநகரில் பத்தர்கேணியடி கிராமத்தில் எழுந்தருளி இருக்கும் வன்மீக விநாயகருக்கு இன்று கும்பாபிஷேகம் நடைபெறுவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இற்றைக்கு சில நூற்றாண்டுகளிற்கு முன்பட்ட பழம்பெரும் பெருமை மிக்க இவ் ஆலயம் ஆதிகால அமைப்பினைப் போல இன்றும் காட்சி தருகின்றது. இக் கிராம மக்களின் அயராத தளராத உழைப்பினாலும் வன்மீக விநாயகரின் அருளினாலும் இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. இன்று மலர்ந்துள்ள சமாதானம் தொடர்ந்து நிரந்தர சமாதானமாக அமைய எல்லாம் வல்ல பத்தர்கேணி வன்மீக விநாயகரை வேண்டி நிற்பதோடு இன்றைய தினம் இக் கும்பாபிஷேக கிரியைகளை கண்டுகளித்து எம்பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற வாழ்த்தி வணங்குகின்றேன்.

*மேன்மைகொள் சைவநீதி*
*விளங்குக உலகமெல்லாம்.*

**தி. மகேஸ்வரன்**
*இந்து கலாசார அமைச்சர்*
*இலங்கை*

## உதவி அரச அதிபரின்ஆசியுரை



காரைநகர் பத்தர்கேணி வன்மீக விநாயகர் ஆலயத்தின் கும்பாபிஷேகம் 40 வருடங்களிற்கு பின்பு நடைபெறுவது மகிழ்ச்சிக்கு உரியதாகும். இன்று பல ஆலயங்களில் கும்பாபிஷேகம் நடைபெற்று நித்திய பூசைகள் நடைபெறுவதால் நாட்டில் நிரந்தர அமைதியும் சமாதானமும் ஏற்படவழி ஏற்பட்டுள்ளது.. இந்த அமைதியும் சமாதானமும் தொடர விநாயகர் அருள் பாலிக்க வேண்டும் என்று அவரது பாதார விந்தங்களை பணிந்து ஆசிகூறி அமைகின்றேன்.

**ஜே.எக்ஸ் செல்வநாயகம்**
*உதவி அரச அதிபர்*
*ஊர்காவற்றுறை.*

## அடியார் உள்ளத்திலிருந்து



"வேழ முகதது விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுநது வரும்
வெள்ளைக் கொம்பன் விநாயக னைத்தொழ
துள்ளியோடும தொடர்ந்த வினைகளே"

பத்தர்கேணி அருள்மிகு ஸ்ரீ வன்மீக விநாயகப்பெருமான் எமக்கு அயலில் அமர்ந்துள்ள எங்கள் குலதெய்வம். நடுச்சாம வேளைகளில் விநாயகர் தமக்குத்தாமே பூஜை செய்யும் மணியோசை அற்புதத்தைக் கேட்டுப் பரவசம் அடைந்தவருள் சிவப்பேறு எய்திய எனது தந்தையார் திரு.எம்.ஏ. கந்தையாவும் ஒருவராவார். எமது வாழ்க்கைக் கருமங்களை ஆற்றத் தொடங்கு முன்னர் விநாயகனுக்கே முதலிடம் கொடுத்து வணங்கி, விநாயகனின் அற்பதங்களை அனுபவித்த எமது குடும்ப உறுப்பினர்கள் எம்பெருமான் மீது மிகுந்த விசுவாசமும் பூரண நம்பிக்கையும் உடையவர்களாக உள்ளனர்.

எனது வாழ்க்கையில் சிறுபராயந்தொட்டு வன்மீக விநாயகரை வணங்குவதில் மிகுந்த ஈடுபாடு உண்டு ஆலயத்தின் பிரதம குருவாகவும் எனது ஆசிரியராகவும் விளங்கியமதிப்புக்குரிய திரு.வி.ஜெகதீஸ்வரசர்மா அவர்கள் விநாயகருக்குப் பூஜை செய்யும் விதமே ஒரு தனி அழகு.



இன்று புதுப் பொலிவுடன் திகழும் இவ் ஆலயத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதை எண்ணி எமது நெஞ்சம் உருகி இறும்பூதெய்துகிறது. இவ்விழா சிறப்புற நடைபெற்று விநாயகப் பெருமான்தம் அடியார்களிற்கு சகல சௌபாக்கியங்களையும் வழங்க வேண்டு மென்று பிரார்த்தித்து நல் ஆசிகளை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

மன்னன் கோன் முறை அரசு செய்யவும், குறைவிலாது உயிர்கள் வாழவும், முன்னவனே! தான்தோன்றீஸ்வரனாய் நின்ற மன்னவனே அருள் பாலிக்க வேண்டுமென மனதார வேண்டி வணங்கி விடை பெறுகின்றேன்.

பத்தர்கேணி
**செல்வி. அன்னலட்சுமி கந்தையா**
*காரைநகர்.*

**மலரமைப்பு**
**ப.ஐங்கரன்**
*காரைநகர் செய்தியாளர்*

லிங்கம்
தொலைத்தொடர்பு நிலையம்
ஆலடி, காரைநகர்
T.P.070-213061

கண்ணன்
ஸ்ரோர்ஸ்
வேம்படி,
காரைநகர்

விநாயகர்
அடியார்கள்
பத்தர்கேணியடி,
காரைநகர்

# இன்று ஒரு தகவல்

## பதவியினாலும் கர்வம்

ஒரே பாடசாலையில் இருவர் சேர்ந்து படித்தார்கள், அதில் ஒருவபயன் பின்னர் ஒரு பெரிய பதவிக்கு வந்து விடுகிறான். மற்றவன் சாதாரணமான நிலைமையில் இருக்கிறான், இவன் அவனைப் பார்க்கிறதற்காகப் போகிறான், வாயிலில் நிற்பவரிடம் ''கூடப்படித்த சினேகிதன் இன்னார் வந்திருக்கிறேன் என்று போய்ச் சொல்லு'' என்கிறான். அந்த ஆள் உள்ளே போய்விட்டு வந்து'' ''ஐயா மிகுந்த வேலையுடன் இருக்கிறார். இப்போது பார்க்க முடியாதாம். இனனொரு நாளைக்கு வரச் சொல்கிறார்'' என்றார். இவன் பேசாமல் திரும்பிப் போய் விடுகிறான். இது சாதாரணமாக நடக்கக்கூடிய நிகழ்ச்சி. இதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்? பதவிக்கர்வம்;

''பெருக்கத்து வேண்டும் பணிவு'' என்றார்திருவள்ளுவர் பதவி அதிகமாக அதிகமாக - பணிவு அதிகமாக வேண்டும்அதுதான்பெருமை. பதவிக் கர்வம் அந்த நிமிடத்தில் வேண்டுமென்றால் ஒரு சுகத்தைக் கொடுக்கலாம். பின்னர் அது ஒரு கட்டத்தில் அவமானத்தில் கொண்டு போய் விட்டுவிடும். மகாபாரதத்தில் வருகிற துருபதனே இதற்கு ஒரு நல்லஉதாரணம். துருபதன்- பாஞ்சால அரச குமாரன். துரோணர் ஏழை. பரத்வாஜஆச்சிரமத்தில்இவர்கள் இருவரும் சேர்ந்து படிக்கிறார்கள். மிகவும் நெருக்கமாக பழகுகிறார்கள் நல்ல நண்பர்கள்.

குருகுல வாசம் முடிந்தது. துருபதன் பாஞ்சால தேசத்துக்குராஜாவாய் விடுகிறான். ஆனால் துரோணரோ வறுமையால் மிகவும் கஷ்டப் படுகிறார். தம் குழந்தைக்குப் பால் கொடுக்க ஒரு பசுகூட இல்லாத நிலைமையில் மிகவும் தவிக்கிறார். அவருடைய மனைவி ''ஏன் இப்படிக் கவலைப் படுகிறீர்கள்? துருபதராஜாதான் உங்கள் சிநேகிதர் என்று சொல்கிறீர்களே! அவரைப் போய்ப் பார்த்து விட்டு வாருங்கள்'' என்றாள்.

துரோணரும் சரியென்று சொல்லி விட்டுக்கிளம்பிப் போனார். துருபதனைப் பார்த்தார். 'நண்பா என்னை ஞாபகமிருக்கிறதா?' என்றார் அப்போது பதவிக்கர்வம் துருபதனுக்குக்கண்ணைமறைத்து விட்டது. 'ஓய் மூடரே! ஏழை-பணக்காரரோடும், மூடன்அறிவாளியோடும், பயந்தாங்கொள்ளி-சுத்த வீரனோடும் நட்பாக இருக்க முடியுமா?' என்று சொல்லி அவரை அவமானப்படுத்தி விடுகிறார்.

அதன் விளைவுஎன்னஆனது தெரியுமா? காலம் மாறியது. துரோணர், அத்தினபுரம்அரசகுமாரர்களுக்கு ஆசிரியராகி விடுகிறார். அர்ச்சுனன் அவருடைய சிறந்த மாணவனாய் விடுகிறான். அவன்துருபதனை வென்று, அவனைத்தேர் காலில்கட்டி, துரோணரிடம் கொண்டு வந்து நிறுத்தி விடுகிறான். அர்ச்சுனன் துரோணருக்குக் கொடுத்த குருதட்சணை இது. இவர் கேட்டதும் அதுதான். பழைய நட்பை மறந்த துருபதன் இப்போது தன்னுடைய ராஜ்யத்தை இழந்து நிற்கிறான், அவமானத்தால் துருபதன் தலை குனிந்து நிற்கிறான்.

அப்போது துரோணர்' உன் ராஜ்யத்தில் பாதியை நான் எடுத்துக்கொண்டேன், அதனால் இப்போது நாமிருவரும் சமம் ஆய்விட்டோம். இனிமேல் நாம் நண்பர்களாக இருக்கலாம்' என்கிறார்.

இந்தப் புராணக்கதைவெறுமனே கேட்பதற்கோ, படிப்பதற்கோ மட்டுமில்லை. நம்மைப் பக்குவப்படுத்துவதற்குமாம். பஜகோவிந்தத்தில் ஆதி சங்கரர் 'மாகுருதன ஜனயௌவன கர்வம்' என்கிறார். அதாவது உன்னுடைய பணத்தைப் பற்றியோ, ஜன ஆதரவைப் பற்றியோ, உன்இளமையைப் பற்றியோ கவலைப் படாதே' என்கிறார். ஏனென்றால் அடுத்த வரியிலேயே காலம் எல்லாவற்றையும் ஒரு நொடியில் அழித்து விடும்என்கிறார்.

இது புரியாமல் நடந்து கொள்வதனால் தான் பல சந்தர்ப்பங்களில் நாம் கஷ்டப் படவேண்டியிருக்கிறது. எனக்கு வேண்டிய ஒருவர் தற்காலிகமாக அவருக்கு ஒரு தலைவர் பதவி கிடைத்தது. வேறு ஒன்றுமில்லை.

ஒரு கூட்டத்திற்குக் தலைமைதாங்குகிற பதவிஅதற்கே. அவர் தன்னைப்பற்றி மிகவும் பெரிதாக நினைக்க ஆரம்பித்து விட்டார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். அவர் தலைமை தாங்கிக் கொண்டிருக்கிறார். ஒரு பேச்சாளர் எழுந்துவந்து மைக்கின் முன் நின்றார். 'பெரியோர்களே! தாய்மார்களே!' என்றார் உடனே தலைவருக்குக் கோபம் வந்து விட்டது. முதலில் தலைவர் அவர்களே என்று சொல்லுங்கள் என்றார். உடனே பேச்சாளர்--- மன்னிக்க வேண்டும். தவறுதலாக நான் தலைவரையும் பெரியோர்கள் பட்டியலில் சேர்த்து விட்டேன் என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தென்பகுதி வர்த்தகர் குழு நாளை யாழ் வருகிறது

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியில் இருந்து நான்காவது வர்த்தகர்குழு நாளை யாழ்ப்பாணம்வரவுள்ளது

19பேர்அடங்கிய இவ்வர்த்தகர்குழுவில் அங்கம்வகிப்போர் விபரம் வருமாறு.

சி.யுவேந்திரகுமார், ஆர். எம்.டபிள்யு. ஆர். டீ. எல்லபொல் -யுனைடெட் மோட்டர்ஸ் லங்காலிமிட்டட்

என்.ஜெ.பிரேமகுமார

ஏ.எச்.சுரேஸ்- ஸ்ரவே ராட் காமெஸ் இன்டஸ்ரீஸ்

என்.ஜீ..உபாலி பண்டிதரத்ன, ரீ. பி. வாசுதேவன் -மன்சல் (லங்கா) லிமிடெட்

பீ.ஏ.லெஸ்லி குமார பெரேரா-சுப்றீம் மார் கெற்றிங் கொம்பனி

ஏ.சீ.எஸ்.பெரேரா, எவ். ஜெ.ஜெயலத்- செனர்ரெக்னோலொஜி

எம்.என்.அமீன் -சம்பியன் பயர்வேர்க்ஸ்

ஆர்.ரவிசங்கர் -ரவிசங்கர் அசோசியேற்ஸ்

மொகமட்சித்திக்-ஜெ.எச்: ஜெ.மாக்கெற்றிங்

டீ.விஜயகுமார்- வி.கே. என்றபிறைசங்

ஜீ.டீ.ஜெயவர்த்தன-ஸ்ரீல் ரெக்

சுரேன் குண்டன்மால் -எலைற்றேடியோ அன்ட்என் ஜீனியரிங்

என்.ஆர், பெர்னான்டோ -ஸ்கொட் இன்ரநசனல்

பிரம்வெல்சிமித் யுனிசெல் டீ.குணசேகரம் டீ.ஏ.எஸ். என்ரபிறைசஸ் பிளான்டேஸ்

ஐ.டீ.எஸ. பெர்னாண்டோ- சிலோன் சினமன் பிளான்டேஸ் (உ)

# நீர்மின் உற்பத்தித் திட்டத்திற்கு சூழல் பாதுகாப்பு நிறுவனம் எதிர்ப்பு

(கொழும்பு)

முன்பு 3 தடவைகள் நிராகரிக்கப்பட்டிருந்த, மேல்கொத்மலை நீர் மின் உற்பத்தித்திட்டத்தைஅமுல்செய்யக்கூடாது என்று சூழல் பாதுகாப்பு நிறுவனம் பிரதமரைக் கேட்டுள்ளது.

சூழல் மற்றும் சமூகக்காரணிகள் பற்றிபோதியளவு கவனத்திற்கொள்ளப்படாது இத்திட்டம் முன்வைக்கப்பட்டிருக்கிறது எனவும் அந்நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

சுற்றுலாப்பயணிகளுக்கு மிகவும் கவர்ச்சிதரும் 7 நீர்வீழ்ச்சிகள் அங்கு உள்ளன. டெவன்ஒயாவைதிசைதிருப்பி அமைக்கப்பட்ட குடைவழிகளில் உடைசல்கள் ஏற்பட்டமை உயரத்திலிருந்து எடுக்கப்பட்ட படங்களில் தெரிகிறது.

உலர்காலநிலை நிலவும் காலங்களில் 150 மெகா வாட் மின் உற்பத்திக்கு உத்தரவாதம் இல்லை; அத்துடன் 632 குடும்பங்களை வேறுஇடங்களில் குடியமர்த்தும் திட்டங்கள் எதுவும் இல்லை.

இந்நிலையில் 3 ஆயிரத்து 500 மில்லியன் செலவிலான இத்திட்டம் முன்னெடுக்கப்படுவதில் ஆபத்துக்கள் உள்ளன என்பதே நிறுவனத்தின் அபிப்பிராயம் என அதன் தலைவர் ரவிஅல்கம சருத்து தெரிவித்துள்ளார்.

மின்சக்தி அமைச்சர் கருஜயசூரியஆரம்பித்த இத்திட்டத்தை இ. தொ. க. தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம்தொண்டமான்எதிர்த்து வருவதும் இதனால் இன்றுவரை திட்டம் பற்றி முடிவு எதுவும் எட்டப்படாமலிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ

## தமிழ்த்தினப் போட்டி

(மந்திகை)

வடமராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கான வலய மட்ட தமிழ் மொழித்தினப்போட்டிநாளையும், எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களிலும் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஷ- 23)

## நியமனக் கடிதங்கள் அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் கடமையாற்றுவதற்கென நியமனம்வழங்கப்பட்ட பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் உரியவர்களுக்கு தபால்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதால்,

முன்னர் அறிவிக்கப்பட்டவாறு, நாளைய தினம் அனுமதிக் கடிதத்தினைப் பெற வேண்டி யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிமனைக்கு சமுகமளிக்கத் தேவையில்லை என மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராசா அறிவித்துள்ளார்.

(உ-19)

## மாணிக்கவாசகர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

ஏழாலை ஆத்மஜோதியான மண்டபத்தில் மாணிக்க வாசகசுவாமிகளின் குருபூசைத் தின நிகழ்வுகள் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆசிரியர் திருமதி நா. கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளன. (ஷ)

★ ★

(உடுவில்)

உடுவில் இந்து இளைஞர் மன்ற ஆதரவில்உடுவில் முருகமூர்த்தி ஆலயத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு மாணிக்கவாசகசுவாமிகள் குருபூசை நடைபெறவுள்ளது.

(உ—8

## வாராந்த நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்று வரும் வாராந்த நிகழ்வுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஸ்ரீ. தர்ஷனனின் இன்னிசையரங்கம் இடம்பெறும்;

இந் நிகழ்வுக்கான அறிமுகவுரையை இசைமணி சி. துரைராசா நிகழ்த்துவார். (ஷ)

## சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரிக்கு 2வெற்றிக் கிண்ணங்கள்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளுக்குஇடையிலான மாகாண மட்ட வலைப் பந்தாட்டப் போட்டிகளில் 19,17வயதுப் பிரிவுகளில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியன் கிண்ணத்தைத் தட்டிக் கொண்டுள்ளது;

15வயதுப் பிரிவில்வட இந்து மகளிர் கல்லூரி சம்பியன் கிண்ணத்தைப் பெற்றது.

(உ)

## சமாதானத்தைவலியுறுத்தி ஓவியக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக் கலாமன்றத்தில் எதிர்வரும் 20, 21ம் திகதிகளில் சமாதானத்தை ஒட்டிய மாபெரும் ஓவியக் கண்காட்சி ஒன்று இடம் பெறவுள்ளது.

மார்க்கு மாஸ்டரின் மாணவனும், கொழும்பு திருமறைக் கலா மன்ற உறுப்பினருமான ஏ. யூட்சனுடைய ஓவியங்கள் இதில் இடம்பெறவுள்ளன.

யுத்தத்தின் பிரதிபலிப்பையும், இன்றைய சமாதான சூழலையும் மையமாகவைத்து இக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் கலா முற்றத்தில் இடம் பெறவுள்ள இக் கண்காட்சியை காலை 9.00 மணி முதல் 5.00 மணிவரை எவருப்பார்வையிட முடியும்.

(உ-6)

## ஜனசக்தி காப்புறுதி நிறுவனக் கிளை

(யாழ்ப்பாணம்)

ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் கிளை அலுவலகம் இல. 165 மானிப்பாய் வீதியில்உள்ள யாழ். வணிகர்கழக கட்டட மேல்மாடியில் விரைவில் திறந்துவைக்கப்படவுள்ளது.

இதற்கு முன்னோடியாக, ஜனசக்தி காப்புறுதி உத்தியோகத்தர்களுக்கு, தலைமைக் காரியாலயத்தில் இருந்துவந்த அதிகாரிகளால் 3 நாட்கள் பயிற்சிவகுப்பு நடத்தப்பட்டது. (உ)

## குடாநாட்டு மீனவர்கள் பயன்படுத்தும் மீன்பிடி உபகரணங்கள் தொழிலுக்கு ஏற்றதல்ல

(திருநெல்வேலி)

யாழ். குடாநாட்டின் கடற்றொழில் வளத்தைப் பேணுவது தொடர்பாக ஆராய சீனநாட்டின் உயர்அதிகாரிகள் குழுவொன்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை தமிழர்விடுதலைக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கத்துடன்சென்று இக்குழுவினர் வடமராட்சி, வல்வெட்டித்துறை மீனவர்களைச் சந்தித்துள்ளனர்;

இச்சந்திப்பின்போது, மீனவர்கள் பயன்படுத்தும் உபகரணங்களைப் பார்வையிட்ட குழுவினர், இவை மீன்பிடிக்க உகந்தவை அல்ல என்றும் நவீன தொழில்நுட்ப உபகரணங்களைத் தமதுநாட்டின் உதவியுடன் வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் மீனவர்களிடம் உறுதி அளித்துள்ளனர்.

இக்குழு அன்றையதினம் மாலையே கொழும்பு திரும்பியது. (ஷ-43)

## நிலக்கரி மின் உற்பத்தி திருமலையில் அமையும்

(கொழும்பு)

இலங்கையின் முதலாவது நிலக்கரிமின் உற்பத்திநிலையத்தை திருகோணமலையில் அமைப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

திருகோணமலையின் கிளபன் போக்பகுதியில் அமைக்கப்படவுள்ள இந்தநிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தின் மூலம் 300மெகாவோட்ஸ் மின்சாரத்தை உற்பத்திசெய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது

மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சர் கருஜெயசூரிய அண்மையில் இப்பகுதியைச் சென்றுபார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## போரூட் நிறுவனத்தினால் சின்னமடுவில் பன்னிரண்டு மலசலகூடங்கள் அமைப்பு

போரூட் நிறுவனத்தினால் சின்னமடுவில் 12மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மலசலகூட வசதியற்ற மிகவும் வறிய நிலையிலுள்ள குடும்பங்களுக்கு மலசலகூடம் அமைப்பதற்கென மேற்படி நிறுவனத்தினால் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முன்னரும்இக்கிராமத்தில் குடியிருப்பு மற்றும் மலசலகூட வசதிகளுக்கு போரூட் நிறுவன ஊர்காவற்றுறை திட்ட அலுவலகம் உதவியமை குறிப்பிடத்தக்கது. (ஷ-75)

### மறைந்தார் மாண்பு

# கருணையின் உருவமான அன்னை தெரேசா

# மக்கள் சேவைக்குத் தன்னை அர்ப்பணித்தவர்

ஆதரவற்றவர்களின் அன்புத் தெய்வம், கருணையின் வடிவம், அன்பின் இலக்கணம், பொறுமையின் உறைவிடம், கர்த்தரின் அருட்கொடை என்றெல்லாம் பலவாறாக போற்றப்படும் பெருமை மிக்கவர் அன்னை தெரேசா. ஐரோப்பா கண்டத்தில் அல்பேனியாவில் விவசாய குடும்பம் ஒன்றில் பிறந்தார். குழந்தைகள். பெரியோர்கள், நோயாளிகள் போன்ற பல வகையினரோடும் இளமையிலேயே அன்போடும், மரியாதையோடும் பழகி வந்தார். கிறிஸ்தவ மதத்திலே மிகுந்த பக்தி உடையவர். இயேசு பெருமானை போன்று தானும் தொண்டாற்ற விரும்பினார். மக்கள் சேவைக்காக தன்னை அர்ப்பணித்தார்.

**கன்னியர் மடம்**

தன்னுடைய பதினைந்தாவது வயதிலேயே இந்தியாவுக்கு வந்து அல்லல்படும் மக்களுக்கு தொண்டாற்ற விரும்பினார். கிறிஸ்தவமத பொது நல சேவை என்னும் அமைப்பில் இணைந்தார். ஆனாலும் இவருடைய வயதினை காரணம் காட்டி தொண்டாற்ற அனுமதிக்கவில்லை, பதினெட்டாவது வயதிலே லொரேட்டா கன்னியர் மடத்திலே சேர்ந்தார். பின் இந்தியா வந்து பயிற்சி பெற்று கல்கத்தா கன்னியர் மடத்தில் நிரந்தர உறுப்பினராக இணைந்தார்.

கல்கத்தா வீதிகளில் கண்ட காட்சிகள் இவர் மனதை நெகிழ வைத்தன. பசியாலும், பிணியாலும் மரணிக்கும் குழந்தைகளை கண்டார் நோய் நொடியால் துவளும் முதியவர்களைக் கண்டார். பசியால் அல்லல்படுபவர்களுக்கு உணவளிக்க விரும்பினார். குழந்தைகளுக்கு கல்வி அறிவு ஊட்ட ஆசைப்பட்டார். ஆனால் அவற்றுக்கும் கல்கத்தாவின் சட்ட விதிகள் இடம் கொடுக்கவில்லை. ரோமாபுரி தலைமை மதகுருவுக்கு இது பற்றி பல கடிதங்கள் எழுதி வெற்றி கண்டார். அன்றிலிருந்து அவரது சேவை உறுதி உன்னதமடைந்தது. பின் சிறிது காலத்தில் ''அன்பின் தூதுவர்கள்'' என்று பொருள்படும் அமைப்பை ஆரம்பித்தார். அங்கே சாதி, மத, இன வேறுபாடின்றி பல இடத்து மக்களும் இணைந்து பல் வேறு சேவைகள் ஆற்றினர். பாடசாலைகள், மருத்துவ மனைகள், குழந்தை காப்பகங்கள், அநாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள் அமைத்தல் போன்ற சேவைகளை ஆற்றினார் இதனால் பல இடங்களிலும் மக்கள் வாழ்வு மறுமலர்வு பெற்றது.

**பல அமைப்புக்களை உருவாக்கல்**

அநாதைக் குழந்தைகளுக்காக நிர்மல் கென்னடி இல்லம், தொழு நோயாளர்களுக்காக தொழு நோயாளர் இல்லம், மரணத்தோடு சஞ்சரிக்கும் அநாதைகளுக்காக தரும சாலைகள் என பல வகை அமைப்புக்களை அமைத்தார். இவற்றையெல்லாம் நடத்துவதற்காக தாமே வீதி தோறும் சென்று இரந்து நிதி திரட்டினார். தான் இரப்பதன் மூலம் ஒரு குழந்தையின் முகம் மலர்வதை பார்க்க விரும்பினார். அத்தகைய ஒரு வள்ளலின் வாழ்விலே ஒரு நாள் நடந்த சம்பவம் மறக்க முடியாதது.

கல்கத்தா நகர வீதி ஓரத்தில் அன்னை கை ஏந்தி இரந்த வண்ணம் நிற்கின்றார். பெண் சுத்திகரிப்பாளர்களின் உடையில் நிற்கும் அன்னையை ஒரு நகை வியாபாரி அருவருப்போடு பார்க்கின்றான். 'ஐயா! அநாதைப் பிள்ளைகளுக்கு ஏதாவது வழங்கி உதவுங்கள்' என்று வியாபாரி முன்னே கையை நீட்டினார். அவனோ, தன் முன் நீண்ட அன்னையின் கைகளில் காறி உமிழ்கிறான். அன்னையின் முகம் அணுவேனும் மாறவில்லை. அவரின் அமைதியான புன்னகை இராமபிரானை நினைவூட்டியது. 'ஐயா நீங்கள் கொடுத்ததை நான் ஏற்றுக்கொள்கின்றேன்., ஆனாலும் மழலை செல்வங்களுக்கு ஏதாவது கொடுத்து உதவுங்கள்' என்று மீண்டும் கூறினார். அந்த வியாபாரி வெட்கத்தால் நாணி தலை குனிந்தான்.

**பரா. றமேஸ்**

**புலோலி தெற்கு**

**செனட்டர் றொபேட்**

மீண்டும் ஒருமுறை இதற்கு நேர்மாறான காட்சி ஒன்று நடந்தது. அமெரிக்க நாட்டின் செனட்டரான றொபேட் என்பவர் அன்னையைக் காண வந்தார். அன்னையோ தொழு நோயாளரின் உடையைத் துவைத்துக் கொண்டிருந்தார். அன்னை இருந்த இடத்திற்குச்சென்றறொபேட் கை குலுக்கும் பொருட்டு அன்னையிடம் கையை நீட்டினார். கையை நீட்டாமல் 'என் கைகள் அழுக்கடைந்திருக்கின்றன' என்றார் அன்னை. உடனே றொபேட் 'அன்னையே மக்களுக்கு ஆற்றும் உன்னத சேவையால் அழுக்கடைந்த உங்கள் கைகளைத் தொட விரும்புகின்றேன் அதைப் பெருமையாகக் கருதுகிறேன்' என்றார்.

எனவே நாம் எந்தவிதமான இடருக்குள்ளானபோதும் பொறுமை நெறியிலிருந்து சற்றேனும் மாறக்கூடாது அன்று அன்னை தெரேசா அந்த நகை வியாபாரியைச் சினம் கொண்டு பேசியிருந்தால் இன்று அவர் 'அன்னை தெரேசா என்று போற்றப்பட்டிருக்க மாட்டார். பாப்பரசர் பாராட்டி விலையுயர்ந்த காரைப் பரிசாக வழங்கி இருக்க மாட்டார், நோபல் பரிசைப் பெற்றிருக்க மாட்டார். 'பாலசான சர்வ தேச விருது' 'பாரத ரத்னா' விருதுகளைப் பெற்றிருக்க மாட்டார். சாதாரண மனிதர்கள் போலவே வாழ்ந்து மறைந்திருப்பார். ஆனால் ஆரம்ப வயதிலேயே சேவை செய்ய சட்டங்கள் தடுத்த போதும் பொறுமையாக இருந்து தன் பணிகளை படிப்படியாக செய்தார். அதனால் இன்றும் உயர்ந்து நிற்கிறார்.

'ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம் பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ்' என்றார் வள்ளுவப் பெருந்தகை. தம்மை தீங்கு செய்தவனை ஒறுத்தார்க்கு அந்த ஒருநாள் இன்பமே, அதனைப் பொறுத்தார்க்கு உலகம் அழியும் அளவும் புகழ் உண்டாம். இதற்கு அன்னையின் வாழ்க்கை ஒரு பாடமாகும் எனவே நாமெல்லாம் பொறுமை என்னும் நகை அணிந்து பெருமை கொண்டால் உலகம் அழியும் வரையும் பெருமை பெறலாம். ●

## மா ஆலை அமையும்

(கொழும்பு)

ஐக்கிய அரபு இராச்சியத்தைச் சேர்ந்த முதலீட்டாளர்கள், 63 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான முதலீட்டை மேற்கொண்டு கொழும்பு துறைமுகத்தில் மா ஆலை ஒன்றை அமைக்கவுள்ளனர். (உ-3)

## 'சலனசித்திரம்' பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

'சலனசித்திரம்' யாழ். பிரதேசக்கிளையின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். புனிதமரியாள் வித்தியாலயத்தில் கிளைப் பொதுச் செயலாளர் எஸ். எம்.இராஜேஸ்கனி தலைமையில் நடைபெறவுள்ளது. (ஷ-106)

## வருடாந்த மஹோற்சவம்

(சுதுமலை)

கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

10 தினங்கள் இடம்பெறவுள்ள உற்சவ காலத்தில் 22 ஆம் திகதி சப்பறத்திருவிழாவும் 23 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் நடைபெறவுள்ளது. (ஷ-252)

## தலைமைத்துவப் பயிற்சிமுகாம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தினால் எதிர்வரும் 20 ஆம் திகதி ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மண்டபத்தில் தலைமைத்துவப் பயிற்சி முகாம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

இப் பயிற்சி முகாமில் ஊர்காவற்றுறைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவ தலைவர்கள் பங்குகொள்ளவுள்ளனர். (ஷ-75)

## சுற்றுநிருபம் அனுப்பி வைப்பு

(கோப்பாய்)

பாடசாலைகளின் ஒழுங்கு, கட்டுப்பாட்டைப் பாதுகாத்தல், பாடசாலைகளுக்கு நிதியுதவி மற்றும் பொருட்கள் ரீதியான அன்பளிப்புகளைப் பெற்றுக்கொள்ளும் விடயத்தில் உரிய சுற்று நிருபத்தைக் கவனத்தில் கொள்ளுமாறும், மாணவர்கள் உடல், உள ரீதியாகத் தண்டிக்கப்படல், மாணவர்களைத் தண்டனை அடிப்படையில் தடுத்து வைத்தல், மாணவர்கள் அனுமதியின் போது நிதி அல்லது பொருள் உதவி பெறல் போன்ற விடயங்கள் தவிர்க்கப்படல் வேண்டுமெனவும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் சுற்றுநிருபம் மூலம் பாடசாலைகளுக்கு அறிவித்துள்ளார். (ஷ-79)

### கூட்டுக்கட்சியொன்றின் குறுக்கே இழுக்கும் போக்கினால்

# பொதுஜன ஐக்கிய முன்னணியின் சமாதானம்

# பற்றிய நிலைப்பாட்டை வெளியிடுவது தாமதம்

(கொழும்பு)

பொ. ஐ.மு தன்னுடன் கூட்டுச்சேர்ந்துள்ள அரசியற் கட்சியான மக்கள் ஐக்கியமுன்னணி உடன்பாடுகாணாததை அடுத்து சமாதானம் தொடர்பான அதனுடைய நிலைப்பாட்டை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

ஜனாதிபதியுடன் கலந்தாலோசனை நடத்தியபின் கடந்த சிலவாரங்களிற்கு முன்னரே பொ.ஐ.மு. தனது நிலைப்பாட்டை வெளியிடத் திட்டமிட்டிருந்தது.

ஆனால், இத்திட்டத்தை முழுமையாகப்படித்து விளங்கிக்கொண்டு தனது ஆதரவை தெரிவிப்பதற்கு போதிய அவகாசம் தரும்படி மக்கள் ஐக்கிய முன்னணி வேண்டுகோள் விடுத்திருந்தது.

இதேவேளை, இந் நிலைப்பாட்டை ஜனாதிபதியிடம் கையளித்த போது அவர் அதில் குறிப்பிட்ட சில மாற்றங்களைசெய்துள்ளார். இதில் முக்கியமானஒன்று சமாதான முயற்சிகளுக்கெதிரான எதிர்ப்பு நடவடிக்கைகள் எதிலும் பொ.ஐ மு. பங்குபற்றக் கூடாது என்பதாகும்.

சமாதான முயற்சிகளுக்குச் சாதகமான நிலைப்பாட்டை பொ. ஐ.மு. கொண்டிருக்க வேண்டும் என்று அதன் உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்ட பின்னரே பொதுவான முடிவு எடுப்பதென தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதற்கென அமைக்கப்பட்ட குழுவில் பொ.ஐ.மு. உறுப்பினர்களான லக்ஷ்மன் கதிர்காமர், தினேஷ்குணவர்த்தன, ராஜாகொலுரே, திஸ்ஸ விதாரண ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

மேற்படி நிலைப்பாட்டுடன் ம.ஐ.மு. தலைவர் தினேஷ் குணவர்த்தனவிற்கு உடன்பாடில்லை என அறியப்படுகிறது.

திருத்தங்களை பிரேரிப்பதற்கு குறித்த திகதியொன்று அறிவிக்கப் பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## பிரவேச - பால பண்டிதர் பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினால் அண்மையில் நடத்தப்பட்ட சைவ சித்தாந்த பிரவேச பண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**சைவசித்தாந்த பிரவேச பண்டிதர்**

3-ம் பிரிவில் சித்தி:

சு சிவவதனி சுன்னாகம், க.சசிலேகா, அச்சுவேலி, தி. சிவரஞ்சினி நல்லூர்,

**சைவசித்தாந்த பாலபண்டிதர்**

2ம் பிரிவில் சித்தி :

ஆ சிவகுமார் பண்டத்தரிப்பு, கு பார்மதி கந்தரோடை, பொ.உஷாஜினி அல்வாய்,

3 ம் பிரிவில் சித்தி:

ச. சங்கீதா நீர்வேலி, வ. சாந்தினி சுழிபுரம்,

**சைவ சித்தாந்த பண்டிதர்**

2-ம் பிரிவல் சித்தி:

குவேனிசந்தசாமி யாழ்ப்பாணம், திருமதி.கு மகாலக்சுமிமல்லாகம், சி.நந்தகுமார் உரும்பிராய், கு.சிவராஜ சர்மா திருநெல்வேலி,

3-ம் பிரிவில் சித்தி:

வே. ஜெயகுரு சுழிபுரம், அ.சருணாகரன் சுழிபுரம், சு.மனோரஞ்சினி வட்டுக்கோட்டை,

நூனசித்தி:-

(இலக்கணப்பாடம்)

கு.செந்தில்குமரன் கோண்டாவில், பு புஸ்பறேகா நீர்வேலி, (உ)

## பனைகள் படையினரால் தொடர்ந்தும் தறிப்பு

(துன்னாலை)

மிருசுவில் பகுதியில் படையினரால் பனைகள் கடந்த சில வாரங்களாகத் தறிக்கப்பட்டு வருவதாக அப்பகுதிமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக பனை அபிவிருத்திச்சபை மற்றும் பொலிஸாருக்கு தெரியப்படுத்திய போதிலும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை,

இதேவேளை, தறிக்கப்படும் பனைகள் தென்மராட்சியில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் காவலரண்கள் மற்றும் படைமுகாம்களில் பயன்படுத்தப்பட்டு வருவதாக அறியப்படுகிறது.

பனைகளைப் படையினர் இனிமேல் தறிக்கமாட்டார்கள் என கடந்தமாதம் யாழ். மாவட்ட படைத்தளபதி உறுதிமொழி வழங்கியமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஷ-41)

# கவிதையின் பிறப்பு என்பது ஆத்மார்த்தமான --உணர்வுகளைப் பிரதிபலிக்க வேண்டும்...

## -மூத்த கவிஞர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்களுடன் நேர்காணல்-

கடந்த ஆறு ஆண்டுகளின் பின் கவிஞர் ச.வே.பஞ்சாட்சரம் தனது சொந்த ஊரான இணுவிலுக்கு வந்துள்ளார் என்ற செய்தி அறிந்து அவரைச் சந்திப்பதற்காகச் சென்றேன்.

நீண்ட நாள் பிரிவு - கண்டதும் இன்முகத்துடன் வரவேற்றார். நாம் இருவரும் நேரம் போனதே தெரியாமல் பழைய நினைவுகள் பற்றியும் இன்றைய நடைமுறைகள் பற்றியும் உரையாடினோம்.

யதார்த்த உலகுக்கு மரபுக்கவிதைகளைத் தருகின்ற கவிஞர்கள் வரிசையில் முதன்மை பெறக்கூடிய கவிஞர் ச.வே.பஞ்சாட்சரத்துடன் நேர் கண்டவற்றை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

☆ **கேள்வி:- உங்களை யாராக வாசகர்களுக்குக் காட்டிக் கொள்ள விரும்புகிறீர்கள்?**

● பதில்:- சமூக, தனிமனித நல் வாழ்வுக்கு வழிவகுக்கும் அறவொழுக்கத்தை, அதற்கான மனச்சார்பை உருவாக்கும், வளர்க்கும் அடிப்படை நோக்குடன் அமைந்தவையும் நெஞ்சையள்ளும் கலைப்பொலிவு புதுமைக் கருத்துக்கள் அணிகள் அமைந்தவையும், வாசக மனங்களில் உச்சமான தாக்கத்தை ஏற்படுத்த வல்லவையுமான படைப்புக்களைத் துணிச்சலுடன் பாடுபவன் பஞ்சாட்சரம் என்று வாசகர்கள் நம்பத்தக்கவனாகவே என்னை இனங்காட்டிக் கொள்ள விரும்புகிறேன்.

☆ **கேள்வி:- இலக்கிய உலகுக்குள் எப்படிப் புகுந்தீர்கள்?**

● பதில்:- இலக்கிய உலகினுள் நான் மிக இளமையிலேயே புகுந்துவிட்டேன். 1955ஆம் ஆண்டுச் சூழலில் என் அண்ணன் ஆசிரியர் குணரத்தினம் கல்கி, குமுதம் முதலியவற்றை வாங்கி வாசிப்பதிலும், சிறுகதைகள் சுயமாகப் படைப்பதிலும் ஈடுபட்டு வந்தமை என்னையும் இலக்கியப் பயிற்சியில் இறக்கியிருந்தது.நண்பன் குணரத்தினமும் என்னையும் கவிதை எழுதிப்பார்க்கும் படி தூண்டினான். அதனால் நான் கவிதை எழுத எடுத்த முயற்சி என்னையே அதிசயிக்க வைத்துப் பெருவெற்றியைத் தந்தது. ''அடக்கமுடை ஆரணங்கே" என்று தொடங்கிய அக் கன்னிக்கவிதை, அந்த நள்ளிரவில் சில மணித்துளிகளுள் ''தூணாயிருந்தவன் நான் தொய்ந்து மெலிந்தின்று துரும்பாகி நிற்பதற்குக் காரணம் நீயறியாயோ?'' என்ற உயிர்ப்பான வரிகளை உள்ளடக்கி உதித்ததுடன் வகுப்பு மாணவர்களாலும் ரசித்துப் பாராட்டப்பட்டதிலிருந்து, என் தமிழ்ப் பாட ஆசிரியர் திரு.சி. முருகவேள். என் சமய பாட ஆசிரியர் வித்துவான் வேந்தனார் ஆகியோர் ஊட்டிய உற்சாகத்தில், தொடர்ந்தும் பல கவிதைகளை எழுதினேன். கலைச்செல்வி சஞ்சிகை கரிசனையோடு என்னை வளர்த்து நாடறிந்த கவிஞனாக்கியது.

☆ **கேள்வி:- உங்களுக்கு முதலில் பெருமை தேடித்தந்த உங்கள் படைப்பு எது?**

● பதில்:- எனக்கு முதலில் பெருமை தேடித்தந்தது இலங்கை சாகித்திய மண்டலத்தின் கவிதைக்கான பரிசைப் பெற்றுத் தந்த ''எழிலி'' என்னும் காவிய நூல் .இப்பரிசைப் பெற்றவர்களுள் மிகக் குறைந்த வயதில் பெற்றவன் என்ற பெருமையும் எனக்குண்டு. இந்நூலின் வெளியீட்டு விழாவில் மேடையில் அமர்ந்திருந்த என்னை,புகைப் படப்பிடிப்பாளர் படம் பிடிக்கத் தவறியிருந்தார். பின்னர் காரணம் கேட்டபோது தேவாரம் பாட வென மேடையில் அமர்த்தப்பட்ட ''பொடிப்பயல்'' என்ற எண்ணத்தில் தாம் தவற விட்டதாக அவர் சிரித்ததும் எனக்குப் பெருமையாகவேயிருந்தது.

☆ **கேள்வி:-சங்க இலக்கியங்களில் ஆழ்ந்த பரிச்சயம் உள்ள நீங்கள் மரபு வழிக் கவிதைகளே பாடியுள்ளீர்கள்.இதே வேளை புதுக்கவிதையும் எழுதியதுண்டா? புதுக் கவிதை பற்றி உங்கள் கருத்துக்கள் யாவை ?**


● பதில்:- பாலபண்டித, பண்டித பரீட்சைகளில் சிறப்புச்சித்திகள் பெற்ற நான் அப்பட்டங்கள் பெற்றதால் பெருமிதங் கொள்வதில்லை. ஆனால் அவற்றுக்காகப் படிக்கப் போய், நம் தமிழினத்தின் 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்து அண்மைக் காலம் வரையிலான அரசியல், சமூக, பண்பாட்டு வாழ்வு முறைகளை விளங்கிக் கொள்ளவும், விம்மிதங்கொள்ளவும் வாய்த்தமை குறித்தே மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைகிறேன் அப்பண்டைத் தமிழ் இலக்கியங்களைக் கற்றதால் பெற்ற சொல்லாட்சியும், யாப்புத் தேர்ச்சியும் மரபுக் கவிதைகள் மூலமே எந்தக் கருத்தையும் உரிய உணர்ச்சி நயத்தோடு- கூர்ப்போடுபாடும் ஆற்றலை எனக்கு வழங்கியுள்ளன. க.பொ.த உயர்தரம் வரை ஆங்கிலக் கவிதைகளையும் கற்று மகிழும் பேறு கிடைத்திருந்ததால், அவ்வாங்கிலக் கவிதைகளின் சிறப்புக்களும் என் கவிதைகளுக்கு மெருகேற்றி நிற்கின்றன. இவ்வாறு யாப்பிலக்கணம் பிசகாத மரபுக் கவிதைகளேயன்றிப் புதுக் கவிதைகளும் என்னால் பாடப்பட்டுள்ளன. யாப்பின் பிணைப்புக்களைப் புறக்கணித்துப் பாடப்பட்ட என் புதுக் கவிதைகள் 40ற்கு மேற்பட்டவை ஈழத்தின் முன்னணிச் சஞ்சிகைகளிலும் இந்தியத்தீபத்திலும் வெளிவந்துள்ளன. அச்சாகிக் கொண்டிருக்கும் எனது பஞ்சாட்சரம் கவிதைகள் முதலாம் தொகுதியிலும் இடம் பெறுகின்றன.

இனிக் புதுக்கவிதைபற்றி சொல்வதானால் அதுவும் ஓர் இலக்கிய வடிவம் என்பதை நாம் ஏற்றேயாக வேண்டும். வடிவச்சிறுமை, கருத்தெளிமை, வித்தியாசமான பொருட்களிலான சொற் பிரயோகம் குறியீட்டு படிமக்காட்சியின்பம் என்பவற்றின் கவர்ச்சியால் பலர் இன்று புதுக்கவிதைகளையும் படிக்கிறார்கள். வள்ளுவர், ஔவையார் போன்ற நீதி நூற் புலவர்கள் சிறு சம்பவத்தைச் சிறு உண்மையை வெளியிடுவதற்கு வெண்பா முதலிய மரபுக் கவிதைக் குறுகிய வடிவங்களைப் பயன்படுத்தினர். ஆயினும் அப்பாடல்கள் ஏதோ ஓர் அடிப்படையில் பல செய்யுள்களின் கொத்துக்களாகவே வெளியிடப்பட்டன. தன்னந் தனியாக சிறு கருத்தைப் பாடியமட்டில், வாசகனுக்கு வழங்கப்படவில்லை. அதனோடு விளங்கிக் கொள்ள விளக்கவுரை வேறு தேவைப்பட்டது. அங்கு எதுகை மோனை ஓசைக்காக அவசியமற்ற சொற்களும் கட்டியாளப்பட்டன. இந்தக் குறைபாடுகளைத் தவிர்த்து,ஓர் சிறு கருத்தை , நிகழ்வை விளக்கமாக சிக்கனமாக, மின்னலடிப்பதான வீச்சுடன் வெளியிட்டுத் தனித் தலைப்பின் கீழ் தனித்துவ விடப் புதுக் கவிதை வாய்ப்பான வடிவமாய் உள்ளது. மேலும் ஓர் லேசான ஓசை இழையோட்டத்துடன் உணர்ச்சி மெருகுடன் பாடப்படும் ''செந்தொடை'' என்னும் பழைய மரபுக் கவிதையுள் புதுக் கவிதையையும் நாம் உள்ளடக்கிப் பார்ப்பது தவறன்று. ஆனால் சுதந்திரமாகச் சொல்லும் போதும் அவற்றை எழுதுகிறவருக்குமே விளங்க முடியாத உளறலாக அமைந்து பத்திரிகைகளிலும் இடம் பெற்றுவிடும் கிறுக்கல்களும் இன்று புதுக் கவிதைகள் என்றழைக்கப்படுகின்றன.

☆ **கேள்வி:-எவ்வகை இலக்கியங்களை இதுவரை படைத்துள்ளீர்கள்? அவற்றினை வகைப்படுத்திக் கூறுவீர்களா?**

● பதில்:- கவிதை இலக்கிய வகையில் இதுவரை பத்திரிகைளில் வெளிவந்த என் ஆக்கங்கள்60 குழந்தைக் கவிதைகள் நூற்றுக்கணக்கான சமூகப் பிரச்சினைகள் பற்றிய கவிதைகள், அரசியற் கவிதைகள், ஏறக்குறைய நூறு காதலுணர்வுக் கவிதைகள். இவற்றோடு கவியரங்குகளில் குறிப்பாகக் கம்பன் விழாக் கவியரங்குகளில் சபையோரின் ஆனந்த ஆரவாரத்தின் மத்தியில் கவிஞர் குழாங்களுடன் கூடி நவரசம் ததும்பப் பாடிய நூற்றுக்கும் மேற்பட்ட கவிதைகள். பிற்காலத்தில் என் பக்தி இலக்கியங்கள் பல, நூல் வடிவம் பெற்றன. அவற்றுள் திரு விரட்டை மணிமாலைகள், மும்மணிக் கோவைகள்,நான் மணிமாலைகள், பிள்ளைத் தமிழ்கள், ஊஞ்சல்கள், திருப்பள்ளி எழுச்சிகள் தூது, அந்தாதி, தலபுராணம், பதிகங்கள் என்பன அடங்கும். மேலும் எனது ''தமிழிலக்கணப் பூங்கா'' நூலின் மூன்றாம் பதிப்பு அச்சாகிக் கொண்டிருக்கின்றது.பரிசோதனைப் படைப்பான சின்னஞ் சிறுகதைகள் என்னும் எனது நூல் பெரும் வரவேற்பைப் பெற்றது. இவ்வாறு எனது 42 நூல்கள் வெளிவந்துள்ளன. இவற்றை விட என் 25 வீரகாவியங்கள் அச்சேறியுள்ளன. எனது20 நாடகங்கள் வரை மேடை யேறியுள்ளன. எனது கண்ணன் கவசம் இசை நாடாக்கள் ஈழத்துக் கண்ணன் கோவில்கள் அனைத்திலும் ஒலித்துக கொண்டிருக்கின்றன.

☆ **கேள்வி:- ஏக காலத்தில் பக்தி இலக்கியங்களையும், இன விடுதலை இலக்கியங்களையும் படைத்து வரும் நீங்கள் ஆத்மதிருப்திப்படும் துறை எது?**



● பதில்:- 'அறிவின் எல்லையில் தெரியப்பட்ட உண்மைகள்' அடங்கிய எங்கள் சைவ சித்தாந்தம் சரி, அகிலத்தின் அதி சிறந்த விஞ்ஞானி ஐன்ஸ்ரீன் சரி ஒரு மனதாக ஒப்புக்கொண்ட உண்மையே இறையுண்மையாகும். சர்வ வல்லமை, சர்வவியாபகம், சர்வஞானம் என்பவான பரிபூரணத்துவம கடவுளுக்கே உண்டென்பது உலகப் பெருமதங்கள் அனைத்தும் ஒப்புக் கொண்ட உண்மை. மனிதன் பூரணத்துவம் அற்றவன். மனிதன் சில வாழ்நாட் பல் பிணிச் சிற்றறிவினோன்.(**Man is imperfect**), பிழை விடுவது இயல்பாய் அமைந்தவன் மனிதன்.(**to err is human**) என்றெல்லாம் கூறப்படுவதால், மனிதன் கடவுளை வழிபட்டுக் குறைபாடுகள் நீங்கப் பெற வேண்டியவனாக உள்ளான். இதனால் இவ்வித மனித ஈடேற்றம் நோக்கமாகப் பாடும் நான் அரசியலை இன விடுதலையை ஏன் பாடுகிறேன் என்ற கேள்வியைப் பலர் கேட்பதுண்டு. அவர்களுக்கு நான் சொல்லி வரும்பதில் இதுதான். என்னுள் பூகம் பித்து எழும் ஓர் அற உந்தலே இன விடுதலையையும் நான் பாடும் படி செய்கின்றது. கடவுள்தான் அறம்! அறம் தான் கடவுள்! அறத்தை ஓம்பாத கடவுள் வழிபாடும் கடவுள் உண்மையை மறுதலிக்கும் அறச் செயற்பாடும் வெற்றி பெறுவதில்லை. கடவுள் மகிழும்படி அறத்தை ஆராதித்தும், ஆதரித்தும் கொண்டு, கடவுளையும் வழிபடுவதன் மூலமே வாழ்க்கையில் வலிமையையும், வெற்றிகளையும், மனமகிழ்ச்சியையும் ஆண்டவன் அருளைப் பெற்று வரும் பாக்கிய வான் நான். இது அனேகருக்கு விளங்காத வெற்றியின் இரகசியம்! நான் ஆராதிக்கும், ஆதரிக்கும் இன விடுதலைப் போராட்டம் அறஞ் சார்ந்தது தானா என்பதும் ஒரு சிலர் கேள்வி! தன்னை ஆதிக் குடியாகக் கொண்டதும், இன்று வரை பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தான் வாழ்ந்துவருவதுமான தாயகப் பூமியை ஓர் இனம், ஆக்கிரமிப்பாளரிடம் பறி கொடுத்து விடாமல், தன் விரைவான அழிவுக்கு வித்து விழுவதை அனுமதிக்காமல், எதிர்த்து வெல்வதே அது ஆற்றவேண்டிய தவிர்க்க

> எனக்கு ஆத்ம திருப்திதரும் துறையே ஆன்மீகத் துறை தான். மனிதர்களுடைய பேச்சோ, செயலோ முதலில் உதிப்பது மனங்களிலே தான். அந்த மனங்களின் பண்பாடு, பக்குவ நிலையில் எழும் எண்ணங்கள் செயல்களாலே அந்தச் சமூகத்தின் வாழ்வின் தன்மை அமையும் ஒரு சமூக மேம்பாட்டின் தொடக்கம் மனங்களிலேயே நிகழ்கின்றது.

முடியாத - தலையாய அறம்! அந்த அறத்தை ஆற்றத்தம் மின்னுயிர்களைப் பல்லாயிரக் கணக்கில் பலி கொடுக்க நேர்ந்தும், தளராமல், விடாமல் போராடும் தமிழ் இளைஞர்களின் உறுதியை, தன்னம்பிக்கையை, தியாகத்தை வாழ்த்திப் பாடித் தெம்பூட்டுவதும அறப்பணி என்பதில் ஐயத்திற்கிடமில்லை. கடவுள் என்று இல்லை! எல்லாம் எங்கள் கையில்தான் இருக்கின்றன என்று அகங்கரித்த படி இன விடுதலைப் போராட்டத்தில் பங்களிக்கும் அரைவேக் காடுகள் சிலரும், தியாகங்கள், அர்ப்பணிப்புக்கள் மயமான இந்த அறப் போரைப் பயங்கரவாதம் என்று முத்திரை குத்தி வெறுத் திகழ்ந்து, தம் முன்னோர், பினனோர் தலை முறைகளுக்கு இரண்டகம் புரிந்து கொண்டு, வீணாகக் கடவுளையும் வழிபடும் பலரும் தான் தர்மத்தின் விரைவான வெற்றிக்கு இன்று தடைக்கற்களாய் உள்ளவர்கள்! மேலும் இவற்றில் அந்த மனப்பக்குவம் பாராட்டுக்குத் தடையாய் நிற்கும் உலகியல் மயக்கங்களில் பின்னிழுப்பையும் எதிர்த்து வென்று முனைப்புடன் வழிபடுவதன் மூலமே மனங்களின் மேம்பாடும் தொடர்ந்து சமூக மேம்பாடும் ஏற்பட முடியும். இதனாலேதான் என் அனுபவ முதிர்ச்சி நிலையில் நான் பக்தியை ஊக்கிப்பாடுவதும், அதிலும் பன்மடங்கு முனைப்புடன் கடவுள் வழிபாட்டில் என்னை ஈடுபடுத்திக் கொள்வதுமாகும். இவ் வழிபாடு என்னான்மாவைப் பலமாக-மகிழ்சசியாக வைத்திருப்பதை உணர் கின்றேன்.

## சமூகத்தின் யதார்த்த நிலையை தீர்மானிப்பது சமகால மக்களின் மனநிலையே

☆ **கேள்வி:- பொருளாதாரம் சார்ந்த துறையில் உங்கள் ஆக்கங்கள் எந்த அளவில் உள்ளன?**

● பதில்:- பொருளாதாரம் சார்ந்த

நேர் கண்டவர்
**துரையர்**

துறையில் என் ஆக்கங்கள் எந்த அளவிலுமே இல்லை. நான் பள்ளியில் சிறப்பாகக் கற்ற துறையாகப் பொருளியல் அமைந்திராமை ஒரு காரணம். மற்றது கல்லினுள் தேனாக்கும், கருப்பை உயிர்க்குங் கூட மனிதனின்மூளை, உடல் உழைப்புக்களுக்கும் அப்பாற்பட்டும் உலாவியும் பரம் பொருளானவன் அவரவரை ''இதனைஇதனால் இவன் முடிக்கும் என்றாராய்ந்து அதனை அவன் கண்விடல் '' நடத்தி வருவதாலேயே இன்றைய ''ரோபோ''மனிதன் வரையானதும், இதற்கப்பாலானதுமான வளர்ச்சிகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. 36 வருட ஆசிரியசேவையின் பின்நிகழ்ந்த என் ஓய்வுச் சேவைநலன் பாராட்டு விழாவில் நான் என் நன்றியுரையில் தெளிவாகச் சொன்ன கருத்து இது தான்-

''ஒருவன் கடவுள் நம்பிக்கையுள்ளவனாக மாற்றப்படுவதே அவனது உயர்விற்கு வித்திடும் சிறந்த வழி! கடவுளிடம் முழுமையாகச் சரணாகதி அடைந்தவனுக்கு கல்வி, ஆரோக்கியம், புகழ், மானம், நிம்மதி,செல்வம் முதலான அனைத்தையுமே வேண்டிய அளவுகளில் ஆண்டவன் வழங்கத் தவறான்''

''எந்தை புகலூர் பாடுமின் புலவீர்கள்! இம்மையேதரும் சோறும் கூறையும் ! ஏத்தலாம்இடர் கெடலுமாம்! அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுற வில்லையே!'' என்ற சம்பந்தர் வாக்கும்.

''அப்பத்துக்கும் திராட்சை ரசத்துக்கும் பின்னால் ஓடாதே! அவை உன்னை ஏய்த்துச் சென்று விடலாம்! நீ என்பின்னால் வா! அப்பமும் திராட்சை ரசமும் உன் பின்னாலே வரும்'' எனற பைபிள் அறிவுரையும் பொய்யா மொழிகளாகும்.

☆ **கேள்வி:- கவிதை மரபுகள் உடைக்கப்படுவது பற்றியோ மீறப்படுவது பற்றியோ உங்கள் கருத்து என்னவாகும்?**

● பதில்:- பெரும்பாலும் ஓசை விடயத்தில் மட்டும் இறுக்கமும். ஏனைய எதுகை மோனை விடயத்தில் நெகிழ்ச்சியும் கொண்ட அகவற்பா யாப்பிலேயே சங்ககால இலக்கியங்கள் பாடப்பட்டிருக்கின்றன. அடுத்துவந்த காலங்கள், தளைசீர், எதுகை, மோனை விடயத்திலும் கடும் கட்டுப்பாடுகள் கொண்ட வெண்பா, கட்டளைக் கலித்துறை, விருத்தம் என்னும் பாவினங்கள் பெருவழக்குப் பெற்று அவ்வடிவங்களில் அமைந்த இலக்கியங்களும் விளக்கம் கடினமானவையாக, நெகிழ்ச்சி எளிமைகுன்றியவையாகஅமைந்து விட்டன. அதேவேளை இக் காலத்தில் பெரு விரிவடைந்து வரும் பாடு பொருளை நுணுக்கமாக வெளியிடும் சுதந்திரத்துக்கு இந்த இறுக்கமான யாப்புப் பெருந்தடையாக இருப்பதாகப் படைப்பாளிகள் .உணர்கிறார்கள். அல்லாமலும் அண்மைக் காலத்தில் பொதுவாக எல்லா நாடுகளிலும் மொழியிலக்கணம் முதன்மையிழந்து பல் துறையறிவுக் கருத்துக்கள் முதன்மை பெறுவதால், பாடுபவர்களுக்கு மொழிக் கல்வியில் தேர்ச்சி போதாத நிலையில், சொற் பஞ்சம், நுணுக்கமான சொல்லாட்சி அனுபவம் கைவரப் பெறாமை என்பன காரணமாக. யாப்புத்தடையை-கட்டுப்பாட்டை உடைத்தெறிந்து சுதந்திரமாகக் கருத்துக்களை வெளியிடும் புதக்கவிதைகள் (**Free Verses**) அனைத்து மொழிகளிலும் பெருவழக்குப் பெறுகின்றன. இன்நிலைமைக்குத் தமிழ் மட்டும் விதிவிலக்காக முடியாது. ஆயினும் புதுக்கவிதைகள் கால வெள்ளத்தை எதிர் நீச்சல் போட்டு நின்று நிலைக்கும் வல்லமையை உருவத்தைப் பொறுத்தமட்டிலும் கூடப் பெற்று விட்டன என்பதற்கில்லை!

☆ **கேள்வி:- பத்திரிகைத் துறையில் உங்கள் அனுபவங்களைக் கூறுவீர்களா?**

● பதில்:- கனதியும் கவர்ச்சியும் மிக்க இதழாக, புதிய படைப்பாளிகள் உருவாகும் களமாக, விளங்கிய 'கலைச் செல்வி'யிலும், ஈழத்தமிழ் ஏடுகளுள் காலத்தால் மூத்த பத்திரிகையான 'இந்து சாதனத்தி'லும் உதவி ஆசிரியராகப் பணி யாற்றி யான் பெற்ற அனுபவங்கள் என்படைப்பிலக்கியத் துறையிலும், நூல் வெளியீட்டுத் துறையிலும் துணிச்சலையும் வினைத்திறனையும் எனக்கு வழங்கிப் பெருந்துணை புரிந்து என் வாழ்வை முழுநீள இலக்கிய வாழ்வாக மேம்படுத்தியுள்ளன. இத்தகைய பணியை ''வலம்புரி''வளரும் எழுத்தாளர் விடயத்திலும் புரிவதற்கு என் வாழ்த்துக்கள்.

# அரச சேவைகள் திருத்தப்படின் நாட்டின் எதிர்காலம் நல்லதாகும்

## பொருளாதார அமைச்சர் மிலிந்த

(கொழும்பு)

அரசாங்க சேவைகள் திருத்தியமைக்கப்பட்டால் நமது நாட்டுக்கு நல்லதொரு எதிர்காலம் அமையுமென்று பொருளாதார மறு சீரமைப்பு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

கொழும்பு பட்டய முகாமைத்து கணக்காளர் நிறுவனத்தின் நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரசியலும், அதிகாரிகள் மத்தியில் காணப்படும் குறைபாடுகளுமே எமது பின்தங்கிய நிலைக்குக் காரணமாகும். அரச சேவை ஊழல் நிறைந்த சேவையாகி விட்டதுஇதனால் பொதுமக்களின் தேவைகள் நிறைவேற்றப்பட முடியாது உள்ளது.

ஒவ்வொரு அரசும்ஆட்சிக்கு வந்ததும் தமக்கு முன்னர் ஆட்சியிலிருந்தஅரசாங்கத்தை குறை கூறுவதிலேயே அதிக நேரத்தை செலவு செய்கின்றன.

இதனால் அரசாங்க ஊழியர்கள் தாமாக ஒதுங்கும் நிலை ஏற்படுகிறது.

அரச ஊழியர்கள் தவறு செய்தால் தண்டிக்கப்பட வேண்டும் என்பதுடன் முடிவுகள் எடுக்கப்படும் போது அவர்களது பணிகளுக்கு குந்தகம் ஏற்படக்கூடாது.

அரசாங்கஊழியர்கள்அனைவரும் அரசியல் பேதமற்ற வகையில் கொள்கையடிப்படையில் செயற்படுவதற்கு ஊக்கமளிக்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் மேலும் கூறினார். (ஷ-8)

# மதகுருவைதுன்புறுத்தியது மனித உரிமை மீறல்

## உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(திருகோணமலை)

இந்து மத குரு ஒருவரை மூதூர் பொலிஸார் கைது செய்து சித்திரவதைக்குள்ளாக்கியது அவரது அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயல் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையை கொலை செய்வதற்காக தமிழீழ விடுதலை புலிகளுக்கு உதவிவந்தார் என இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அடுத்தமாதம் 31 ஆம் திகதிக்குள் இவருக்கு 40 ஆயிரம் ரூபாவை நஷ்டஈடாக அரசாங்கம் வழங்க வேண்டும் என நீதிமன்றம் தீர்ப்பளித்து மதகுருவை விடுதலை செய்துள்ளது. (உ-8)

# கிராம அலுவலர் வீட்டில் கத்தி முனையில் களவு

(யாழ்ப்பாணம்)

கிராம சேவையாளர் ஒருவரின் வீட்டினுள் நள்ளிரவில் புகுந்த முகமூடிக் கொள்ளையர் ஒரு லட்ச ரூபா பெறுமதியான தங்க நகைகளை கத்தி முனையில் களவாடிச் சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதிப்பகுதியில் மணியம் கட்டடத்திற்கு அருகாமையில் உள்ள எஸ்.ஆனந்தராஜாஎன்பவரதுவீட்டிலேயேசெவ்வாய் நள்ளிரவு இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மேம்படி சம்பவம் தொடர்பாக யாழ்,பொலிஸ்நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-19)

# காணாமல்போன வாகனங்கள் மீட்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தின் போது காணாமற்போன 15 வாகனங்களை இரகசியப் பொலிஸார் நேற்று கண்டு பிடித்துள்ளனர்.

முன்னாள் அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டிருந்த மேற்படி வாகனங்கள் குறித்த விபரங்களை கொள்கைதிட்டமிடல் அமைச்சு இரகசியப் பொலிஸாருக்கு தெரிவித்திருந்தது.

கடந்த 7 மாதங்களாக காணாமல்போய் தற்போது கண்டுபிடிக்கப்பட்ட இவ்வாகனங்களில்சில செயற்படமுடியாத நிலையில் உள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி லயனல்குணதிலக தெரிவித்துள்ளார். (உ-8)

# கதிர்காமக் கந்தன் உற்சவம் நேற்று ஆரம்பம்

## பக்தர்கள் படையெருப்பு

(கொழும்பு)

வரலாற்றுப்புகழ் வாய்ந்த கதிர்காம ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இவ்வாலயத்தின் உற்சவத்திற்கு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பெருந்தொகையானமக்கள் சென்றுவர ஆரம்பித்துள்ளனர்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அமைதியான சூழலை கருத்தில்கொண்டே இவ்வாறு பெருந்தொகையான மக்கள் வழிபாட்டுக்காக செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

# ஏ. எச். எம். பௌஸி மீது ஒழுக்காற்று நடவடிக்கை

## ஜனாதிபதி எடுப்பாராம்!

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌஸி மீது ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்ககுமாரதுங்க ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அனுராபண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில்கொழும்பும வட்டத்தின் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்த போதே அனுரா இதனைத் தெரிவித்துளளார்.

மேற்படி கூட்டத்திற்கு பௌஸி சமுகமளிக்காததுடன் அவர் பொதுஜன ஐக்கிய முன்னணிக்குப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய பாதகமான அறிக்கைகளை அண்மையில் விடுத்த காரணத்தினாலேயே ஜனாதிபதி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தின் போது யுத்தம் காரணமாகவே பொருள்கள், சேவைகளின் விலைகள் அதிகரித்துள்ளன. ஆனால், தற்போதைய அரசு காரணமின்றி பொருட்களின் விலைகளை அதிகரித்துள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு ,தமிழீழ விடுதலைப் புலிகளுடன்இணைந்து இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் உடன்பாட்டுக்கு வர முடியுமானால், பொதுஜன ஐக்கிய முன்னணி. மக்கள் விடுதலை முன்னணியுடன் ஏன் இணைந்து செயற்படக் கூடாது எனவும் அனுரா கேள்விகளை எழுப்பியுள்ளார். (உ-8)

### வேலை வாய்ப்பு பற்றிய இளைஞர்களின்

# எண்ணப்பாட்டை கண்டறிய நாடு முழுவதிலும் ஆய்வு

(ஈச்சமோட்டை)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன்அரச, தனியார்,அரசசார்பற்ற மற்றும் ஏனையதொழில்வாய்ப்புகளைப் பற்றிய இளைஞர்களினது எண்ணப் போக்கினைப் பற்றிய ஆய்வொன்றை நடத்த தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் திட்டமிட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் நடத்தப்படவுள்ள இந்தஆய்வில் மாவட்டரீதியாக இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள், இளம்தலைவர்கள். ஆகியோர் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இந்தஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கான பயிற்சிப் பட்டறை பட்டங்கல பயிற்சி நிலையத்தில் 16 17,18,19ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சியில் கலந்து கொள்ளயாழ் மாவட்டஇளைஞர் சேவை மன்றத்தில் இருந்து இரண்டு இளைஞர் சேவைஉத்தியோகத்தர்களும் இரண்டு இளந்தலைவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (உ-59)

# தமிழ்த்தினப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வலய தமிழ்த் தினப் போட்டிகள் எதிர்வரும் 17,18 ஆம் திகதிகளில் முறையே வைத்தீஸ்வரக் கல்லூரி, யாழ். இந்துமகளிர் கல்லூரி ஆகியவற்றில் இடம் பெறவுள்ளன. (உ)

# மாஓ தீவிரவாதிகளைஒழிக்க நேபாள மன்னர் சீனாவிடம் உதவி

(காத்மண்டு)

நேபாளத்தை தளமாக கொண்டு இயங்கிவரும் மாஓ தீவிரவாதிகளை ஒழித்துக்கட்டுவதற்கு மன்னர் கஜனேந்திரா சீனாவிடம் உதவிகோரியுள்ளார்.

சீன ஜனாதிபதி ஜி. என். செமினிக்கும் நேபாள மன்னருக்கும் இடையே நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போதே இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மாஓ தீவிரவாதிகளுக்கும் அந்நாட்டு இராணுவத்துச்கும் இடையே இதுவரை காலமும் நடைபெற்ற யுத்தம்காரணமாக 45 ஆயிரந்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதாக நேபாள அறிக்கையொன்று கூறுகின்றது.

நேபாள மன்னர் ஆட்சி முறையை ஒழித்துக்கட்டுவதற்காகவே மாஓ தீவிரவாதிகள் போராடி வருகின்றனர் என்றும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

# அலங்கார உற்சவம்

(கோப்பாய்)

கோப்பாய் பலானை கண்ணகைஅம்மன்ஆலயவருடாந்த அலங்கார உற்சவம்எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம்திகதிஇரதோற்சவமும்24ஆம்திகதிதீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (ஷ-79)

# உலகின் செலவாளி நகரம் கொங்கொங்

(லண்டன்)

உலகில் மிகவும் செலவு மிகுந்த நகரம் கொங்கொங் என்று ஆய்வுகள்மூலம் தெரியவந்துள்ளது.

மேஜின் மனிதவள நிலையம் மேற்கொண்ட ஆய்வின் போது இது தெரியவந்துள்ளது.

இதுவரை காலமும் உலகின் செலவு மிகுந்த நகரமாக ரோக்கியோ இருந்து வந்துள்ளது;

இந்த ஆய்வு முடிவுகளில் இரண்டாவது இடத்தில் மொஸ்கோவும் மூன்றாவது இடத்தில் டோக்கியோவும் உள்ளன.

வீட்டுவசதி,உணவு,வீட்டுப் பாவனைப் பொருட்கள் உடுதுணி போக்குவரத்து. பொழுதுபோக்கு ஆகிய 200 அம்சங்களில் உலகளாவிய ரீதியில் 144 நகரங்கள் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. (உ-8)

# முன்னாள் பிரதமர் பூட்டோவுக்கு 3ஆண்டுகால கடூழியச் சிறை

## தங்கஇறக்குமதியில் ஊழல் புரிந்தாராம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானின் நீதிமன்றம் ஒன்று முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோவுக்கு மூன்றாண்டு கால கடூழியச் சிறைத் தண்டனையை விதித்துள்ளது.

டுபாயிலுள்ள நிறுவனம் ஒன்றுடன் தங்க இறக்குமதி தொடர்பான ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டபோது இலஞ்சமாக பெருந்தொகைப் பணத்தை பெற்றார் என்ற குற்றச் சாட்டின் பேரிலேயே இவருக்கு இத்தண்டனை வழங்கப்பட்டுளளது.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ நீதிமன்றத்துக்கு சமுகமளிக்காத நிலையிலேயே ராவக்கண்டி நீதிமன்றம் இத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

பாகிஸ்தானில் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிடும் தகுதியை இத்தீர்பபு மூலம் பெனாசீர் இழந்துள்ளதாக பாகிஸ்தானின் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த சனிக்கிழமை ஜனாதிபதி பர்வேஷ்முஷரப்விடுத்த உத்தரவுக்கு அமைய பூட்டோவும், நவாஸ் செரிப்பும் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை ஏற்கனவே இழந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

# ஈராக் ஜனாதிபதி சதாமை விரைவில்பதவி கவிழ்ப்பேன்

## அமெரிக்க அதிபர் சூளுரை

(பக்தாத்)

ஈராக்கின் ஜனாதிபதி சதாம் ஹூசைனை பதவியிலிருந்து கவிழ்ப்பதற்கான அனைத்து வழிகளையும் அமெரிக்கா பிரயோகிக்கவுள்ளது என அமெரிக்க ஜனாபதிபதி ஜோர்ஜ் டயிள்யூ புஷ் தெரிவித்துளளார்.

வெள்ளை மாளிகையில் வைத்து அண்மையில் ஊடகவியலாளர்களிடம் பேசும் போதேபுஷ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஈராக்கின் ஆட்சிப் பீடத்திலிருந்து சதாமை அகற்றுவதே அமெரிக்காவின் கொள்கையாகும் என்றார் (ஷ-8)

தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்

குறள்

வலம்புரி

## அஞ்சுகின்ற அரசு!

நாட்டின் இனப்பிரச்சினை சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீரக்கூடிய சாத்தியங்கள் குறைந்து வருவதை அவதானிக்க முடிகிறது. அரசும் -விடுதலைப்புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டாலும் சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்குச் செல்வதில் எத்தனையோ தடைகள் தாமதங்கள் இருப்பதைப் பார்க்கும் போது தீர்வுத்திட்டத்தில் எப்படியெப்படியெல்லாம் குளறுபடிகள் இருக்கும்என்பது புலனாகிறது.

சமாதானத்தை ஏற்படுத்தியே தீருவோமென ஆட்சிப் பீடமேறிய ஐக்கிய தேசிய முன்னணி எதிர்க் கட்சிகளின் எதிர்ப்புக்கு மத்தியில்சமாதான முயற்சியை இம்மியும் நகர்த்த முடியாத நிலையில் உள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசைப்பொறுத்தவரை பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியும் இணைந்து பலமான எதிர்க்கட்சியாக இருப்பதால் அவற்றை எதிர்கொள்ளும்திராணியின்றி அரசு திண்டாடுவதுதெளிவாகிறது.

வரவு செலவுத்திட்டத்தில் ஏற்பட்டுள்ள நிதிப் பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்காக அத்தியாவசியப் பொருட்கள் மீது விலையதிகரிப்பைச் செய்த ஐக்கிய தேசிய முன்னணி அரசு எதிர்க் கட்சிகளின் ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்புகளைச் சமாளிக்க முடியாது திடீரென அத்தியாவசியப் பொருட்களின் விலைக் குறைப்பை அறிவித்துள்ளது.

பொதுஜன ஐக்கியமுன்னணியின் ஆட்சியில் ஏற்பட்ட விலை அதிகரிப்புகளின் போதெல்லாம் அப்போது எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சி எத்தனையோ எதிர்ப்புகள், ஆர்ப்பாட்டங்கள் செய்தபோதும் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு, சற்றும் தளர்வடையவில்லை. ஆனால் தற்போது ஆட்சியில் இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் மறுவடிவமான ஐக்கிய தேசிய முன்னணி அரசு எதிர்க்கட்சியின் ஆர்ப்பாட்டங்களுக்கும், பேரணிகளுக்கும் அஞ்சுவது வெளிப்படையாகி விட்டது.

இந்நிலையில் பாரிய விடயமான இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொறுப்பை அரசு எவ்வாறு நிறைவேற்றுமென்பது கேள்விக்குரியதே

# பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை எழுதிய பேச்சுவழக்கு நாடகங்கள் பெரும் பயனுள்ளவை

இ. சிவானந்தன்

(நேற்றைய தொடர்ச்சி)

சமுதாய இயல்புடன் படைக்கப்பட்ட இந் நாடகத்தின் பாத்திரங்களைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து, ரஷ்ய நாடகாசிரியர் கோகோலது பாத்திரப் படைப்புகள் பற்றிக் கூறப்பட்ட கருத்துடன் இணைத்து நோக்கலாம். . . 'கோகோல் தமது கால ரஷ்யாவைத் தமது நாடகங்களிற் பிரதிபலிக்க விரும்பியமை போன்று, கணபதிப்பிள்ளையும் தமது கால இலங்கையை-சிறப்பாக யாழ்ப்பாணத்தை தவறான எண்ணத்தில் பிரதிபலிக்க முயற்சித்துள்ளார் . . .இந்தியத் தமிழரைப் பிரதிநிதிப்படுத்தும். மாணிக்க தேவர் (கோப்பிக்கடைக்காரர்)என்ற பாத்திரம்பேச்சு வழக்கைப் பொறுத்த வரையில் மற்றையபாத்திரங்களின் அளவுக்குச் சிறப்பாக வார்க்கப்படவில்லை என்று இந் நாடகம் பற்றிக் கூறப்படுகிறது.

1954 இல் பேராசிரியரால் புதிதாக எழுதப்பட்ட இந் நாடகம்கண்டி, யாழ்ப்பாணம் கொழும்பு முதலானஇடங்களிலெல்லாம் மேடையேற்றப் பட்டது.

### சுந்தரம் எங்கே?

பேராசிரியரின் அச்சேறாத நாடகங்களில் ஒன்று 'சுந்தரம் எங்கே?' என்பது கையிற்பசையில்லாத போது எட்டியும் பாராத தங்கை, குடும்பத்து இளமட்டங்கள் தலையெடுத்த பிறகு உள்விழுந்து உறவு கொண்டாடும் பெரும்புள்ளி அருணாசலம், செல்வச்செருக்கினால் அருணாசலத்தையே தூக்கியெறிந்து பேசும் அவர் மனைவி சிவக்கொழுந்து, தமையன் அருணாசலத்துக்காகப் பழைய சண்டைகளை மறந்தாலும் மைத்துனியோடு அருகி நிற்கும் செல்லாச்சி, உறவினரை முடிந்து வைக்கும் பண்டிதர், போன்ற உயிர்த்துடிப்புடன் உணர்ச்சி ததும்பும் யாழ்ப்பாணப்பகுதியில் நாம் நாடோறும் கண்டு பழகும் பாத்திரங்களைக் கொண்டு இந்நாடகம் இயற்றப்பட்டுள்ளது. குடும்ப அமைப்பையும் வாழ்க்கை முறைகளையும் நன்கு பிரதிபலிக்கும் உயர்ந்த வசன நாடகம் என இதனைச் சிலர் வர்ணித்துள்ளனர்.

'சுந்தரம் எங்கே?' நாடகம் நாட்டின் பல பகுதிகளிலும் மேடையேற்றப்பட்டு அதன் மூலம் கிடைத்த பணமான ரூபா 6000 தமிழ் மாணவர் உபகாரநிதியில் சேர்க்கப்பட்டமை ஒரு பயன்பாட்டுச் சார்புடைய அரிய சாதனை எனலாம். இது பற்றி 55-56 இளங்கதிரின் இறுதியிலே 'சேர்க்க மறந்தவை' என்ற தலைப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

### துரோகிகள்

1956 இல் மேடையேறிய இந் நாடகத்தில் அவ்வாண்டின் வரலாற்றுத் தனித்துவ முத்திரையும் இருப்பதாகத் தெரிகிறது.

'. . . அநீதிகளைத் தகர்த்தெறிந்து பிறர் உதவியை நாடாத மனத்துடன் வாழ வழிவகைகள் தேடும் ஒரு சமூகத்தின் உண்மைத் துரோகிகள் யார்? என்றகேள்விக்கு விடை கூறும் பாணியில் அமைந்திருக்கும் இந் நாடகம் தமிழ்மக்கள் சிந்தனையில் ஓர் எழுச்சியை உண்டாக்குகிறது.'

என்ற பத்திரிகைக் குறிப்பொன்று இதனைத் துல்லியமாக எடுத்துக் கூறுகிறது.

தமிழினத்தில் தோன்றிய சுயநல நாட்டம் கொண்ட அரசியல் துரோகிகளினாலேதான் தமிழ் மக்களுக்குப் பரிதாபகரமான நிலைமை ஏற்பட்டதுஎன்றகருத்து, நாடகம் முழுவதும் இழையோடுகிறது. இந்நிலையிலிருந்து தமிழினம் தலை தூக்கவேண்டுமானால் ஒரு சுதந்திரப் போராட்டத்தைத் தமிழ்மக்கள் ஒருமித்து நடாத்தவேண்டும் என்பதும், அத்தகைய போராட்டத்தில் எழுத்தாளர், விவசாயி, மாணவர் பெண்கள், தொழிலாளர், துறவிகள் யாருமே ஈடுபட்டு உழைக்க வேண்டும் என்பதும் இந்நாடகம். மறைமுகமாகப் பிரசாரம் செய்யும் பருப்பொருட்கள், உதவிப் பத்திராதிபர் இமய வரம்பன், போர் வீரனாக வந்துஇளைப்பாறிய கலிப்பகை, மோட்டார் வண்டி திருத்தும் துப்பாக்கி, அரசியல் விழிப்புள்ள சாமியார் ஆடவல்லார், உழவுத் தொழில் செய்யும் இரும்பொறை, வைத்தியமாணவன் கருணாகரன் தங்கை முற்போக்குவாதி மின்னிடை வஞ்சி, வாழ்க்கை வசதி படைத்த பிரகலாதன் ஆகியோர் நாடக பாத்திரங்களாகும்.

'இனவெறி பிடித்த கும்பல் காத்திராப்பிரகாரமாக அதிகாரத்துக்கு வந்தால் வேறு என்ன எதிர்பார்க்கலாம்?'' என்று இரும்பொறையும் ''காலத்துக்குக் காலம் எமக்குத் தலைவராய் வந்தோர், தங்கள் நன்மைக்காக மாற்றானுக்கு எம்மைவிற்று இரண்டகம் செய்து விட்டார்கள்' என்று இமயவரம்பனும், 'எங்களுக்குள் பிளவு இருந்தால் மாற்றானை எதிர்க்கமுடியாது ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு' என்று கருணாகரனும், 'எதற்கும் நாம் ஆயத்தம், நாட்டுக்குத் தியாகம் என் இலட்சியம்' என்று முடிநாகரும் கூறுவன நாடகத்தின் போக்கைப் பிரதிபலிக்கின்றன.

'ஈழத்துத் தமிழ்ப்பேசும்மக்களுக்கேற்பட்ட கசப்பான அனுபவங்களைக் கருவாகக் கொண்டு உறைப்பாக எழுதப்பட்ட இந்நாடகத்திற்குஅதிக வரவேற்பிருந்தது ஏனெனில் அவசியமான ஒரு சமயத்தில் மிக அவசியமான கருத்துக்களை- யோசனைகளை வெளியிடும் ஓர் அத்தியாவசியமான நாடகம்''

என்பது இன்னொரு பத்திரிகைக் குறிப்பாகும்.

யாழ். மாநகர மண்டபத்தில் இரு தினங்களும், கொழும்பு லயனல்வென்ற் அரங்கில் இருதினங்களும் கண்டி திரித்துவக் கல்லூரியிலும், மட்டக்களப்பில் இரு தினங்களும் வெகுவிமரிசையாக மேடையேறிய இந்நாடகத்தில் கா. சிவத்தம்பி, க. கைலாசபதி, வீரகேசரி பிரதம ஆசிரியர் கே. சிவப்பிரகாசம் ஆகியோரெல்லாம் நடித்திருக்கிறார்கள்.

இந்நாடக மூலம் திரட்டிய பணத்தினைக்கொண்டுசி. வை தாமோதரம்பிள்ளை, ஆறுமுக நாவலர் ஆகியோரின் பெயரில் புலமைப்பரிசில்கள் வழங்க ஒழுங்கு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

அச்சேறாத பேராசியரின் 'சுந்தரம் எங்கே?'' 'துரோகிகள்'' ஆகிய இரு நாடகங்களையும் நூலுருப்பெறச்செய்வதும் எமது நாடக உலகில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒருபணி ஆகும்.

### வரலாற்று நாடகம்

பேராசிரியரால்1952 இலே எழுதப்பட்டுக் கொழும்பிலே இயங்கிய பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம் நடித்த பேராசிரியரின் கடைசி நாடகம்''சங்கிலி'' என்ற வரலாற்றுநாடகம் ஆகும்.

யாழ்ப்பாண அரசை கி.பி.16ஆம் நுற்றாண்டின் முற்பகுதியில் ஆண்டுவந்த சங்கிலி மன்னன்பற்றிய வரலாற்று நூல்கள் அவனை ஒருதுட்டனாகவும் கொடுங்கோலனாகவும் அறிமுகஞ் செய்துள்ளன. இதனை உணர்ந்தபேராசிரியர் சங்கிலியின் வரலாற்றைப் புதியகோணத்திலிருந்து நோக்கிப்படைத்த நாடகமே சங்கிலி. இதுகாறும் வரலாறு என்ற பெயரில் வழங்கிவந்த கதையைக் கவிழ்த்துக்கொட்டிச் சங்கிலியைச் சிறந்த வீரனாகவும், தேசபக்தனாகவும் வெஞ்சமரில் சாதல் வரநேரினும் சூழ்ச்சி விரும்பாத பெருந்தகையாகவும் சங்கிலியைத் தரிசிக்கவைப்பதே இந் நாடகம். பேச்சுத் தமிழில் அன்றைக்குக் கொடிகட்டிப் பறந்த, பேராசிரியர் செந்தமிழில் இவ்வரலாற்று நாடகத்தை ஆக்கியுள்ளார்.

''. . . இந்நாடகத்தில் இடம்பெறும் அப்பாமுதலி என்ற பாத்திரம், சமுதாயத்தில்நிலவும் அடுத்துக் கெடுக்கும் மனப்பாங்கைப் பிரதிநிதிப்படுத்துகிறது. பரநிருபசிங்கன் சங்கிலியின் அண்ணனாகஇருந்த போதும் அப்பாமுதலியின் வலைக்குட்சிக்கி, தன் நாட்டுக்கும் தம்பிக்கும் துரோகம் செய்வது, நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் சீர்கேட்டையே சுட்டுகின்றது. சமூகத்தின் நல்ல மனப்பான்மைகளுக்கெதிராகக் கூட்டுச் சேரும தீய சக்திகளின் ஓர் உருவமாக முத்துலிங்க முதலி என்ற பாத்திரம் படைக்கப் பட்டுள்ளது. சமுதாயத்திற் காதலின் பொருட்டுத் தமது தாய் தந்தையருக்கெதிராகவே கிளம்பும் பெண்களின் ஒருபிரதிநிதியாகவடிவழகி படைக்கப்பட்டுள்ளாள். வடிவழகியின் தாயான கனகம், யாழ்ப்பாணத்தின் சராசரிப் பெண்ணொருத்தியாகச் சித்தரிக்கப்படுகிறாள்.

ஒருபுறத்தில் சங்கிலி நாடகம் அப்போதைய சமகால நாடகங்களுடன் ஒப்பீட்டளவில் சமுதாயப்பாங்கானதாக படாடோபமற்ற இயல்பான எளிமையான பேச்சு நடையினதாக மேலோங்கி நிற்கிறது என்ற அபிப்பிராயம் உள்ள அதேவேளை பேராசிரியரின் ஏனைய நாடகங்களுடன் ஒப்பிடுகையில் 'சங்கிலி' சோடை போனதாகவும் சிலர் குறிப்பிடுவர்.

### தழுவல் நாடகம்

''1950 இல் முதன்முதலும் 1953இல்இரண்டாம்பதிப்பாகவும் அச்சேறிய 'மாணிக்க மாலை'என்ற நாடகத்தில் வரும் அரசவைக் காட்சியை மட்டும், 1969இலே பேராதனையில்இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ் நாடக மன்றத்தினர் நடிப்பதற்காகத் தேர்ந்தெடுத்தனர். அவ்வாண்டிலே இரண்டு மூன்று மாதம் முறையாக ஒத்திகை பார்க்கப்பட்ட பின் நடைபெற்ற போட்டி ஒன்றில் 'பொம்மைவண்டி', 'சகுந்தலை' எனும் நாடகங்களுடன் போட்டியிட்டுப் பரிசைத் தட்டிக்கொண்டது இந்நாடகம்.

இந்நாடக நூல் முன்னுரையில் ஆசிரியர் கூறுவதாவது:

' கி.பி. ஏழாம் நூற்றாண்டில் கன்னோசியை ஆண்ட அரிசவருத்தனன் வடமொழியில் இரத்தினாவலி என எழுதியநூலைப் பின்பற்றியது. இந்நூலைக் கற்கும் தொறும் இதனைத் தமிழ் மொழியில் யாத்தல்வேண்டும் என்னும் பெருவிருப்பு என்னுள்ளத்தில் பலமுறை

(3-ம் பக்கம் பார்க்க)

## சாயி அருளமுதம்



பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவதற்குபுலமையோ, செல்வமோ, பொருட் சேவையோ அல்லது தவத்தின் கடுமைகளோ வேண்டியதில்லை. வால்மீகிக்கு என்னவம்ஸபரம்பரை, குசேலரிடம் என்ன செல்வம், சபரிக்குஎன்ன பாண்டித்தியம், பிரகலாதனுக்கு என்ன வயது, கஜராசனுக்குஎன்ன அந்தஸ்து, விதுரருக்கு என்ன சாதனைகள் இருந்தன எனக் கூறுங்கள் பார்க்கலாம். பிரேமை மட்டுமே அவர்களிடம் இருந்தது.

அவர்களுக்குத் தேவைப்பட்டதும் அதுவே. கடவுளின் கிருபையானது சமுத்திரத்தைப் போல அகன்றது, வரைவற்றது. உங்கள் சாதனா, ஜபம், தியானம், நற்செயல்களை ஒழுங்காக விருத்தி செய்தல் என்பவற்றின் மூலம் இந்தக் கிருபையானது உண்மையென்னும் முகிற் கூட்டங்களாக மாற்றப்பட்டு மனித வர்க்கத்தின் மீது பிரேமை மழையாகப் பொழியும் அவை திரண்டு ஆனந்தவாரிதியாகப் பெருக்கெடுத்து மீண்டும் இறைவனுடைய கிருபையாகிய சமுத்திரத்தைச் சென்றடையும்.

நன்றி

- நாளாந்த நற்சிந்தனை



"பியூமி"படப்பிடிப்பு நாடாக்களின் தயாரிப்பு நிறுவனமான கைலீஸ் நிறுவனத்தினர் நேற்றைய தினம் நடத்திய கருத்தரங்கின் போது யாழ் கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் என்.வரதராஜா உரையாற்றுவதையும் அருகில் நிறுவன பிரதிநிதிகள், கல்லூரி அதிபர்கள் நிற்பதையும் கருத்தரங்கு மண்டபத்தில் நிறுவன பிரதிநிதிகள் அமர்ந்திருப்பதையும் காணலாம்

**பண்டிதர்...**

இவரது அறிவாற்றலைக் கௌரவிக்கும் வகையில் யாழ் பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கி சிறப்பித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

**சுயாதீன..**

குழுவினர் கொழும்பில் 20ம் திகதி முதல் 24ம் திகதி வரை தொடர்ந்து விசாரணைகளை நடத்தியபின் தமது அறிக்கையை 26ம் திகதி வெள்ளிக்கிழமை அரசிடம் சமர்ப்பிப்பார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

**அமெ. தூதுவர்..**

வேளையில் நாடு தற்போது எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகள், முஸ்லிம் மக்களின் நிலை மற்றும் இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள ஆகியன குறித்து இந்தப் பேச்சுக்களில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.(த)

**கண்காணிப்புக்...**

இதேவேளை நேற்று முன்தினம் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹெவ்டே மட்டக்களப்பில் பொலிஸார் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

**ம.தி.மு.க தலைவர்..**

அவர்கள் இலங்கை அரசுக்கு எதிராகவே போர் புரிந்து வருகிறார்கள் என்றும் வை.கோ கைது செய்யப்படுவாரானால் சுமார் 50 ஆயிரம் தொண்டர்கள் இன்று மறியல் போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என்றும் ம.தி.மு.கவின் அவைத் தலைவர் கணேசன் தெரிவித்துள்ளார். (ம)

**விடுதலைப்புலிகள்..**

விடுதலைப் புலிகள் மீது முஸ்லிம் மக்கள் பூரண நம்பிக்கை வைக்கலாம். எனினும் இதனை விரும்பாத சில தீய சக்திகள் இரு இனங்களிலும் இருக்கிறார்கள் என்ற விடயத்தையும் தான் கண்காணிப்புக் குழுவினருக்கு தெரியப்படுத்தியதாகவும் கூறினார்.

இதேவேளை விடுதலைப்புலிகளின் தளபதிகளை மட்டக்களப்பில் சந்தித்த பின்னர் பத்திரிகையாளர்களுக்கு தமது சந்திப்பு குறித்து கருத்து தெரிவித்த யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் பியூறு ஹெவ்டே மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள நல்லுறவு வரவேற்கத்தக்கது என்று தெரிவித்தார்.(இ)

**அரசின் சமாதான.**

னெடுப்புக்கள் தொடர்பில் பலத்த சந்தேகம் தோன்றியுள்ளது.

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தை மூலம் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்ற நிலைப்பாட்டை சந்திரிகா குமாரதுங்கா கொண்டுள்ளார். யுத்தநிறுத்த உடன்படிக்கையின் படி பொதுமக்களை பாதுகாக்கவேண்டிய பொறுப்பும், கடமைப்பாடும் அரசாங்கத்திற்குள்ளது. இந்த நிலையில் விடுதலைப்புலிகள் வரி அறவிடுவதால் நாட்டின் சில பாகங்களில் பதற்றநிலை தோன்றுவதற்கு வழி வகுத்துள்ளது. இதனால சமாதான முன்னெடுப்புக்களில் சந்தேகம் தோன்றியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு - வாழைச்சேனை பகுதியில் அண்மையில் இடம்பெற்ற இன வன்முறைச் சம்பவங்கள் மேலும் தொடராதவகையில் அரசாங்கம் துரித நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பது ஜனாதிபதியின் விருப்பமாகும். அரசாங்கம் சுதந்திர ஆணைக் குழுக்களை நியமிப்பதற்கு அனுசரணையாக அவ் ஆணைக்குழுக்களுக்கு ஜனாதிபதி தனது பிரதிநிதிகளை நியமனம் செய்து சுமார் இரு மாதங்கள் கடந்த நிலையில் இன்று வரை சுதந்திர ஆணைக்குழுக்களை அரசு நியமிப்பதில் தாமதத்தைக் காட்டி வருகிறது. இது அரசின் கையாலாகாத தன்மையையே எடுத்துக் காட்டுகின்றது என்றும் ஹரஸ் பீரிஸ் அச் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். (வ)

**வேலணை மத்திய...**

லயத்தில் கடந்த 10வருடங்களாக முகாமிட்டிருந்த கடற்படையினர் நேற்றுமுதல் வெளியேறி அதற்கு அருகாமையில் புதிய பாரிய முகாம் ஒன்றை அமைத்துள்ளனர்.

புதிய முகாம் அமைப்பதற்கு பெருந்தொகையான விவசாய நிலங்களை படையினர் ஆக்கிரமித்துள்ளனர் என்று விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை பாடசாலையின் புதிய அதிபராக பதவியேற்றுள்ள அருணகிரிநாதன் படையினர் விட்டுச்சென்ற விடுதிகளைப் பார்வையிட்டார். (ம)

COMMERCIAL BANK

## வாடிக்கையாளர்களுக்கு ஓர் முக்கிய அறிவித்தல்

கொமர்ஷல் வங்கி யாழ். கிளை வங்கியின் ஏனைய கிளைகளுடன் **Comnet** வலைப்பின்னலில் இணைக்கப் படவுள்ள நிகழ்வின் அங்குரார்ப்பண வைபவம் இன்று 11.07.2002 வியாழக்கிழமை காலை 8.30மணிக்கு வங்கியின் கணனி மயப்படுத்தப்பட்ட கட்டடத்தில் நடைபெறவுள் ளது.

எனவே அன்றைய தினம் வங்கியின் சகல அலுவல்களும் காலை 10.00மணிக்கே ஆரம்பமாகும் என்பதை இத்தால் தயவுடன் அறியத்தருகிறோம். இதனால் ஏற்படும் அசௌகரியங்களை பொறுத்துக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

அன்றைய தினம் இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறும் வேண்டுகின்றோம்.

முகாமையாளர்
வர்த்தக வங்கி
யாழ்ப்பாணம்

(C/4643)

Global Informatics (Pte) Ltd.
379, Kasthuriyar Road, Jaffna.

இன்று முதல் உங்களது சகல விதமான கணனித் தேவைகளை பூர்த்தி செய்ய ஆரம்பிக்கப்படவுள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

கலாநிதி சி.மகேசன [தலைவர், கணனி விஞ்ஞானத்துறை, யாழ். பல்கலைக்கழகம்] அவர்களால் இன்று காலை 9.00மணி தொடக்கம் 10.00 மணி வரையுள்ள சுபவேளையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

- Personal computers
- Computer Accessories
- Servers
- Computer Maintenance, Service Contract & Repairs
- Networking & Data Communication
- Software Development
- Net working products
- Internet & email Services
- Corporate Training & Solution [Banking, Business Administration &Technical]
- Structured Cabling

(C/4648)

Global
Networking & Communication

Head Office: # 17A/1, Moors Road, Colombo 06.
Tel: +94 (1)505849, 077364246, 077364247
Fax: 94(1) 505849 email: gi@dialogsl.net

## நான்காவது வர்த்தகக்குழு யாழ் விஜயம்

இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கொழும்பிலிருந்து 23 வர்த்தக மற்றும் தொழிலதிபர்கள் கொண்ட குழுவொன்று 2002 யூலை 12ம் தகதி வெள்ளிக்கிழமை யாழ் வரவுள்ளது. இக்குழுவினர் யாழ் குடாநாட்டில் வர்த்தக செயற்பாடுகளை மீளக் கட்டியெழுப்புவது பற்றி யாழ் வர்த்தகர்களுடன் கலந்துரையாடவுள்ளனர்.

இக்குழுவினர் யாழ் வணிகர் கழகத்துக்கு காலை 11 மணிக்கும் வர்த்தக சம்மேளனமும் கைத்தொழில் நிறுவனத்துக்கும் பி.ப 2.30 மணிக்கும் விஜயம் மேற்கொள்வர். குழுவி னரதும், அவர்களது துறைசார்ந்த விபரங்களையும் கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக் கொள் ளலாம்.

திரு. இ. ஜெயசேகரன்
தலைவர்
யாழ் வணிகர் கழகம்
165, மானிப்பாய் வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021 - 2367, 2403, 3535
அலுவலகம்
844 பருத்தித்துறை வீதி
நல்லூர்

திரு. K. பூரணச்சந்திரன்
தலைவர்
யாழ்ப்பாணம் வர்த்தக சம்மேளனமும் கைத்தொழில் நிறுவனமும்
C/O. புரோமோட்டர்ஸ் என்ஜினியர்ஸ் கொம்பனி
வீடு
124, இராசாவின் தோட்டம் வீதி
நல்லூர்
தொலைபேசி 3088

குறிப்பு:- யாழ் குடா நாட்டிலுள்ள சகல வர்த்தகர்களும் ஆர்வலர்களும் இவ் வர்த்தக குழுவினரைச் சந்தித்துப் பயன் பெறலாம்.

(C/4649)

இலங்கை வர்த்தக சம்மேளனம்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 20 - 07 - 1934

இறப்பு 11 - 07 - 2001

### திருமதி. நவமணி கருணாநிதி

**திதி. 30.06.2002**

அச்சுவேலி தெற்கு சிவசக்தி கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் காலஞ்சென்றவர்களான இராசையா இராசபிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற சிவனடியான் மற்றும் அருந்ததி, சந்திரமணி, சிவகுமாரன் அவர்களின் அன்புச் சகோதரியும் பருத்தித்துறை ஒய்வு பெற்ற பாடசாலை அதிபர் கருணாநிதியின் அன்பு மனைவியும் முல்லைத்தீவு முன்னாள் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கமலகுமார் (இலண்டன்), கருணைகுமார் (ஜெர்மனி), பிரேமளாதேவி (இலண்டன்), கிருஷ்ணகுமார் (இலண்டன்), காலஞ்சென்ற ஐங்கரன், சிறிகரன் (இலண்டன்), பூலோகவாணி (இலண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் முல்லைத்தீவு கச்சேரி முன்னாள் உத்தியோகத்தர் கமலநாயகி மனோரஞ்சிதமலர், வினோதகுமார், பரிமளா, சுஜாதா, வசீகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், லக்சன், கவிசன், கெசிக்கோ, பெஸ்விக்கா, தினேஸ், திவ்யா, திலிப், ஐங்கரன், ஷரிக்கா, ஜெருஷா,மனிஷா, ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கும.

60, WEST WICKHAMKENT
BR40RL
LONDON

கணவன், பிள்ளைகள்
பேரப்பிள்ளைகள்

(C/4647)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.07.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.